பொதுசன நூலகம்
[illegible] படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 27 புதன்கிழமை (11.03.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 082

## மாத்தறையில் தற்கொலைத் தாக்குதல் 15 பேர் உயிரிழப்பு;45 பேர் படுகாயம்

### அமைச்சர் மகிந்த விஜயசேகரவும் படுகாயம்

(கொழும்பு)

மாத்தறை கொடாப்பிட்டிய அக்குறச பகுதியில் அமைந்துள்ள ஜும்மா பள்ளி வாசலிற்கு அருகில் நேற்று முற்பகல் இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 15 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அமைச்சர் ஒருவர் உட்பட 45 பேர் காயமடைந்துள்ளனர்.

இத் தாக்குதலில் படுகாயமடைந்த தபால் மற்றும் தொலைத்தொடர்புகள் அமைச்சர் மகிந்த விஜயசேகர நேற்று பிற்பகல் விசேட ஹெலிகொப்டர் மூலம் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டு கொழும்பு தேசிய வைத்தியசாலை சத்திரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இத் தாக்குதலில் காயமடைந்த தென் மாகாண முன்னாள் முதலமைச்சர் எச்.ஜி. சிறிசேன மற்றும் அவரது புதல்வர் ஆகியோரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் தொடர்பாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் (12ஆம் பக்கம் பார்க்க)


## வன்னியில் நேற்று அகோர குண்டுமழை

## ஏழு மணித்தியாலத்தில் 129 பேர் பலி

### மேலும் 277 பேர் படுகாயம்

(லண்டன்)

வன்னியில் நேற்று அதிகாலை 2.30 மணி தொடக்கம் காலை 10 மணிவரை தொடர்ச்சியாக மேற்கொள்ளப் பட்ட அகோர ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களில் 129 தமிழ் மக்கள் உயிரிழந்துள்ளனர். மேலும் 277 பேர் படுகாயமடைந்து மருத்துவமனைகளில் அனு



மாத்தறையில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குத

# மேலும் 277 பேர் படுகாயம்

(லண்டன்)

வன்னியில் நேற்று அதிகாலை 2.30 மணி தொடக்கம் காலை 10 மணிவரை தொடர்ச்சியாக மேற்கொள்ளப் பட்ட அகோர ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களில் 129 தமிழ் மக்கள் உயிரிழந்துள்ளனர். மேலும் 277 பேர் படுகாயமடைந்து மருத்துவமனைகளில் அனு மதிக்கப்பட்டுள்ளனர். (12ஆம் பக்கம் பார்க்க)



மாத்தறையில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குத லில் சேதமடைந்த மோட்டார் சைக்கிள் களையும் உயிரிழந்த சடலங்களையும் படத்தில் காணலாம்.

# இலங்கைப் பிரச்சினை குறித்து ஹிலாரி -மேனன் சந்தித்துப் பேச்சு




(வாஷிங்டன்)

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டனை இந்திய வெளியுறவுத் துறை செயலாளர் சிவ்சங்கர் மேனன் சந் தித்து இலங்கைப் பிரச்சினை குறித்துப் பேசி யுள்ளார்.

சிவ்சங்கர்மேனன் நான்கு நாள் சுற்றுப் பயணமாக அமெரிக்கா சென்றுள்ளார்.

நேற்று முன்தினம்அவர் வாஷிங்டனில் அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்டனை சந்தித்துப் பேசினார்.

சுமார் 45 நிமிடம் நடைபெற்ற இந்தச் சந் திப்பின்போது இலங்கைப் பிரச்சினை குறித்து முக்கியமாக (12ஆம் பக்கம் பார்க்க)



# கப்பல் சேவை இன்று இல்லை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைக்கும் திருகோண மலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று இடம்பெற மாட்டாது என யாழ் இராணுவ சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி மேஜர் அருணசிறி தெரிவித்தார்.

கப்பல் போக்குவரத்து இடம்பெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார். (ச-5)

# புல்மோட்டையில் அமைக்கப்படும் இந்திய இராணுவத்தின் முகாம்

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

வடக்கில் யுத்தத்தினால் காயமடையும் மக் களுக்கு சிகிச்சையளிப்பதற்கென்ற பெயரில் புல்மோட்டையில் அமைக்கப்படவுள்ள இந்தி யாவின் வைத்தியசாலையானது உண்மையி லேயே இந்திய இராணுவத்தின் முகாமாகும் என்று ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார். (12ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுடன் பேச்சு நடத்துமாறு அமெரிக்கா கோரவில்லை

## அமெ.தூதுவர் பிளேக் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தை விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துமாறு அமெரிக்கா வலியுறுத்தாது என்று அமெரிக் காவின் நிலைப்பாட்டை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் (02ஆம் பக்கம் பார்க்க)

# பளை நோக்கி புலிகள் ஷெல் தாக்குதல்!

(கொழும்பு)

பளை,முகமாலை மற்றும் கிளாலி பகுதி களில் ஏ-9 வீதியை இலக்கு வைத்து நீண்ட இடைவெளியின் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆட்லெறித் தாக்குதலை நடத்தியுள்ள னர் என படையினரை மேற்கோள் காட்டி இணையத்தளங்கள் செய்திவெளியிட்டுள்ளன.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு ஆரம்பித்த (12ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணம் வந்த லொறிகளில் 11 லொறிகள் இன்று திரும்புகின்றன

## அவற்றில் மரக்கறி அனுப்ப ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து ஏ-9 வீதியூடாக யாழ்ப்பாணத்திற்கு புறப்பட்ட 290 மெற்றிக் தொன் அளவிலான அத்தியாவசிய உணவுப் பொருட்களுடன் 22 லொறிகள் நேற்றிரவு 7.30 மணியளவில் நாவற்குழி அரச களஞ் சியத்தை வந்தடைந்ததாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

உலக உணவுத் திட்ட நிவாரணத்திற்கு வழங்குவதற்கென (12ஆம் பக்கம் பார்க்க)




சிறுவர்களை மீட்போம்

சிறுவர் ஆட்சேர்ப்பை நிறுத்து

போருக்கு சிறுவர்களை ஆட்சேர்ப்பது இலங்கை மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு முரணானது. இந்தப் பிரச்சினையில் இலங்கை அரசாங்கம் பூரண எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறது.

புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதி செயலகம்

unicef




மல்லாகம் மாவட்ட நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்ற நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவனுக்கு மல்லாகம் நீதிமன்றில் கடந்த 28ஆம் திகதி பிரியாவிடை நிகழ்வு நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் ஓய்வு பெற்ற நீதிபதி திருமதி இளங்கோவன் மங்கல விளக்கேற்றுவதையும் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா, ஓய்வு பெற்ற நீதிபதி ஆகியோர் உரையாற்றுவதையும் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற நீதிபதி அ.பிறேம்சங்கர், யாழ். மேலதிக நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் ஓய்வுபெற்ற நீதிபதிக்கான நினைவுப் பரிசிலை மல்லாகம் மாவட்ட நீதிபதி ரி.ஜே.பிரபாகரன் வழங்கிக்கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

# கடையை உடைத்து திருட முற்பட்டவர் இராணுவத்தினரால் மடக்கிப்பிடிப்பு

## திருநெல்வேலியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சந்தைப்பகுதியில் உள்ள கடை ஒன்றினை உடைத்து திருட முற்பட்ட திருடன் ஒருவர் இன்று இராணுவத்தினால் மடக்கிப்பிடிக்கப்பட்டார். இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 10.00 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

சம்பவ தினத்தன்று மூன்று பேர் கொண்ட திருடர்கள் குழு வொன்று திருநெல்வேலி சந்தைப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றை உடைத்து திருட முற்பட்டுள்ளனர்.

அவ்வேளை திருநெல்வேலி பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் ரோந்து சென்று கொண்டிருந்த போது அப்பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் சிலரின் நடமாட்டத்தை அவதானித்தனர்.

உடனடியாக அப்பகுதியை சுற்றிவளைத்து தேடுதலில் ஈடுபட்ட போது திருடர்கள் வர்த்தக நிலையத்தை உடைத்துக் கொண்டிருந்ததை கண்டுள்ளனர்.

அவர்களை துரத்திச் சென்ற போது இருவர் தப்பி ஓடி விட்டனர். ஒருவர் மடக்கிப் பிடிக்கப் பட்டார். பிடிக்கப்பட்ட திருடன் திருநெல்வேலி பகுதியில் கட்டி வைக்கப்பட்டு நேற்றுக் காலை கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டார். (ச-6,7)

# புலிகளுடன் பேச்சு நடத்...

றொபேர்ட் ஓ பிளேக் மீண்டுமொரு தடவை தெளிவுபடுத்தியுள்ளார்.

விடுதலைப்புலிகளுடன்தான் பேச்சு நடத்த வேண்டும் என அமெரிக்கா ஒருபோதும் இலங்கைக்கு ஆலோசனை வழங்காது என அமெரிக்காவின் தேசிய பாதுகாப்புச் சபையின் பேச்சாளர் மைக் ஹமர் கூறியிருந்தார். இதுதான் அமெரிக்காவின் நிலைப்பாடு என்பதை றொபேர்ட் ஓ பிளேக்கும் கொழும்பு ஊடகமொன்றிடம் உறுதிப்படுத்தியுள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினை சமாதானப் பேச்சுவார்த்தை மூலமே தீர்க்கப்பட வேண்டும் என்பதே அமெரிக்காவின் நிலைப்பாடு என ஹமர் கூறியிருப்பது மிகவும் சரியானது என்றார் பிளேக்.

வடபகுதியில் தொடர்ந்தும் நிலவிவரும் மனிதநேயப் பிரச்சினைகள் குறித்து அமெரிக்கா கவலையடைவதுடன், இவை தொடராது தடுக்கப்படவேண்டும் என்பதில் அமெரிக்கா கவனம் செலுத்தியுள்ளது.

தமது கட்டுப்பாட்டிலுள்ள மக்களை வெளியேறுவதற்கு விடுதலைப் புலிகள் அனுமதிக்க வேண்டும்.

நாமும் ஏனைய இணைத்தலைமை நாடுகள் மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் ஆயுதங்களைக் கைவிடுமாறு விடுதலைப் புலிகளிடம் கோரிக்கை விடுத்திருந்தோம். மோதல்கள் அற்ற பகுதியை உருவாக்குமாறு இரண்டு தரப்பினரிடமும் நாங்கள் கோரிக்கை விடுத்திருந்தோம்.

அத்துடன் சர்வதேச அமைப்புக்கள், தூதரகக் குழுக்கள் மற்றும் மனிதநேய அமைப்புக்கள் இடம்பெயர்ந்த மக்கள்தங்கியிருக்கும் முகாம்களுக்குச் சென்று மக்களைப் பார்வையிடுவதற்கு அனுமதிக்க வேண்டுமென அமெரிக்கா இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (ச-5)

# சுதுமலை இளைஞன் கொழும்பில் கடத்தப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், சுதுமலையைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் கொழும்பில் கடத்தப் பட்டுள்ளதாக யாழ். மனித உரிமை ஆணைக் குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

எச்சாட்டி வைரவர் கோவிலடி, சுதுமலை தெற்கு, சுதுமலை என்ற முகவரியைச் சேர்ந்த தர்மலிங்கம் சுதர்ஷன் (வயது26) என்ற இளைஞனே கடத்தப்பட்டதாக அவரது பெற்றோரினால் முறையிடப் பட்டுள்ளது. இவர் கொழும்பில் லொட்ஜ் ஒன்றில் தங்கியிருந்த போது கடந்த 7 ஆம் திகதி கடத்தப்பட்டுள்ளதாக லொட்ஜ் உரிமையாளர் தனக்கு அறிவித்துள்ளதாக அவரது தாய் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் மேற்கொண்ட முறைப் பாட்டில் தெரிவித்துள்ளார். (ச)

வாழ்த்துகின்றோம்

இளவாலை ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலய ஆதீன குரு எங்கள் வணக்கத்துக்குரிய சிவஸ்ரீ இராம பாலச்சந்திர குருக்கள் அவர்களின் குமாரர்கள்

சிரஞ்சீவி சிவானுஜ சர்மாவுக்கும்
சிரஞ்சீவி தரணிதர சர்மாவுக்கும்

இன்று நடைபெறும் யஜ்ஞோபவீத தாரண பிரம்மோபதேசம் சிறப்பாக நடைபெறவும் அவர்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கவும் திருவருளையும் குருவருளையும் வேண்டி வாழ்த்துகின்றோம்.

திருமுறைக் கழகம்,
மண்டைதீவு.

(இ)

# மற்றொரு மருத்துவக்குழு நேற்று இலங்கை வந்தது

முல்லைத்தீவு விடுவிக்கப்படாத பகுதியிலிருந்து வரும் காயமடைந்தவர்களுக்கும் நோயாளர்களுக்கும் சிகிச்சையளிப்பதற்காக இந்திய வைத்தியத்துறைக்குச் சொந்தமான மற்றுமொரு மருத்துவக்குழு நேற்று பிற்பகல் இலங்கையை வந்தடைந்தது. இந்திய மருத்துவக் குழுவொன்றும் நேற்று முன்தினமும் இலங்கை வந்ததாக சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் அத்துல ஹகத்த லியனகே தெரிவித்தார். இந்த மருத்துவக் குழுவின் பங்களிப்புடன் எதிர்வரும் 13ஆம் திகதி புல்மோட்டைப் பகுதியில் சத்திர சிகிச்சை வைத்தியாலை யொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை எடுக்கும் நோக்குடன் இலங்கை வந்துள்ள இந்திய மருத்துவக் குழு இன்று புறப்பட்டுச் செல்வதாக சுகாதார அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார். (ச-3,14)

# காணாமல் போயிருந்த மூதாட்டி புதைக்கப்பட்ட நிலையில் மீட்பு

## மாட்டின் வீதியில் பயங்கரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாட்டின் வீதியில் கடந்த வருடம் டிசம்பர் 30 ஆம் திகதி காணாமல் போயிருந்த மூதாட்டி கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டிருந்த நிலையில் அவரது வீட்டின் பின்புறத்திலிருந்து நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.



அதே இடத்தைச் சேர்ந்த லில்லிமேரி வேதநாயகம் (வயது 80) என்ற மூதாட்டியே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சம்பவம் தொடர்பாக விசாரணையின் போது தெரியவந்துள்ளதாவது, பிரஸ்தாப மூதாட்டியை கடந்த டிசம்பர் மாதம் 30ஆம் திகதியிலிருந்து காணவில்லை என யாழ். மனித உரிமைகள் ஆணையகத்தில் முறையிடப்பட்டிருந்தது.

அன்று தொடக்கம் அவரைத் தேடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிலையில் நேற்று மூதாட்டியின் வீட்டில் இருந்த குடும்பப் பெண், மூதாட்டியின் உடல் வீட்டின் பின் புறத்தில் புதைக்கப்பட்டிருப்பதாக தகவல் தெரிவித்தார்.

இது குறித்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்த யாழ். குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி ருக்மல் தலைமையிலான குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ். நீதிபதி வசந்தசேனன் முன்னிலையில் சடலம் தோண்டி எடுக்கப்பட்டது. இதன்போது சட்ட வைத்திய அதிகாரிகளான எம். சுகுந்தன், கே.இரட்ணசிங்கம் ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர்.

தோண்டி எடுக்கப்பட்ட சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்துடன் தொடர்புடையவர் எனச்சந்தேகிக்கப்படும் மூதாட்டியின் வீட்டிலிருந்த குடும்பஸ்தர் தலைமறைவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

# வடமராட்சியில் பெரும் கடலலையால் வலைகள் இழுத்துச் செல்லப்பட்டன

(யாழ்ப்பாணம்)

வடமராட்சியில் நேற்று முன்தினம் வீசிய கடும் காற்றினால் ஏற்பட்ட பெரும் அலைகளினால் பல இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள் இழுத்துச் செல்லப்பட்டதாக கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.

கற்கோவளம் பகுதியில் உள்ள கடற்றொழிலாளர்களின் கரைவலை, தங்கூசிவலை, சூடைவலை என்பனவே கடலலையினால் இழுத்துச் செல்லப் பட்டுள்ளன. இதனால் மீனவர்கள் தொழில் செய்ய முடியாத நிலை காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

கடலில் போடப்பட்டிருந்த மற்றும் கரையிலிருந்த வலைகளே இழுத்துச் செல்லப் பட்டுள்ளன. (ச-1)

# இன்று ஒரு தகவல்

## அந்த ஒருவன்

திபெத்தில் புத்த மடாலயங்கள் பல உண்டு. அவற்றின் தலைமையகம் திபெத்தின் தலைநகர் லாசாவில் இருக்கிறது.

அங்குள்ள ஒரு கிளைமடாலயத்தை ஒருவர் நிர்வகித்து வந்தார். அவருக்கு மிகவும் வயதாகிவிட்டது. அதனால் அதன் தலைமைப் பொறுப்பை வேறொருவரிடம் ஒப்படைக்க முடிவு செய்தார்.

உடனே ஒரு லாமாவைக் (புத்த பிக்கு) கூப்பிட்டு அவர் மூலமாக தலைமை மடாலயத்துக்கு ஒரு செய்தி அனுப்பினார். பொருத்தமான வாரிசு ஒருவரை அனுப்பி வைக்க வேண்டும் என்பதே அந்தச் செய்தி.

அந்த வாலிப லாமா புறப்பட்டார். காடு மேடெல்லாம் கடந்து ஒருவாறு தலைமைப் பீடத்தை அடைந்தார்.

தலைமைக் குருவிடம் விஷயத்தைக் கூறினார். தகுதியான ஒருவரை அனுப்பினால் அழைத்துக்கொண்டு போகிறேன் என்றார். அதற்கு அவர், "நாளைக்கு காலையில் அவர்கள் எல்லோரையும் அழைத்துக் கொண்டு போகலாம்" என்றார்.

"அவர்கள் எல்லோரையுமா? அங்கே தேவைப்படுவது ஒருவர் தானே!" என்றார் இவர்.

"ஆமாம்" என்றார்.

"அதற்கு ஏன் எல்லோரையும் அழைத்துக் கொண்டு போகச் சொல்கிறீர்கள்?" என்றார்.

"அது இப்பொழுது உனக்குப் புரியாது... நான் நூறு பிக்குகளை அனுப்புகிறேன்" என்றார்.

"அவ்வளவு பேரையும் அங்கு வைத்துச் சமாளிக்க முடியாதே!" என்றார் இவர்.

அதற்கு தலைமைக்குரு, "அதை பற்றிக் கவலைப் படாதே! நான் நூறு பேரை அனுப்புகிறேன். அதில் 99 பேர் இடை வழியிலேயே காணாமல் போய் விடுவார்கள். ஒருவன் மட்டும் தான் வருவான்" என்றார்.

மறுநாள் அந்த வாலிப லாமா நூறு பேரை அழைத்துக் கொண்டு புறப்பட்டார். போகும் வழியில் பலர் பிரிந்து போய் விட்டார்கள்.

வழியில் அவர்களுடைய ஊர் இருந்தது தான் காரணம். அம்மா அப்பாவைப் பார்க்க சிலரும் உறவினர்களைப் பார்க்க சிலரும் பிரிந்து விட்டார்கள். ஒருவாரம் ஆகிவிட்டது. பத்துப் பேர் தான் மிஞ்சினார்கள்.

போகும் வழியில் ஒரு நகரம். அங்கே சில பிக்குகள் வந்து சந்தித்தார்கள். எங்கள் மடாதிபதி இறந்து விட்டார். உங்களில் யாராவது ஒருவர் எங்களுக்குத் தலைவராக முடியுமா? என்றார்கள்.

பத்துப் பேரும் தயார். அவர்களில் ஒருவரை அழைத்துக் கொண்டு அவர்கள் போய்விட்டார்கள்.

இன்னொரு ஊரில் இருந்த சிலபேர் வந்து வழிமறித்தார்கள். "எங்கள் மன்னரின் மகளுக்கு திருமணம். அதை நடத்தி வைக்க மூன்று லாமாக்கள் தேவை" என்றனர்.

இப்படி கொஞ்சம் கொஞ்சமாக எல்லோரும் போய் விட்டார்கள். கடைசியாக இருவரே மிஞ்சினார்கள். அங்கே ஓர் இளம் பெண் எதிரில் வந்தாள்.

"எனது அப்பா வேட்டைக்கு சென்றிருக்கிறார். திரும்பி வரவில்லை. வீட்டில் தனியாக இருக்க பயமாக இருக்கிறது. யாராவது ஒருவர் எனக்கு துணையாக இருக்க வேண்டும்" என்றாள்.

அதற்கு ஒருவர் சென்றுவிட்டார். மிஞ்சியது ஒருவர் தான். அவருக்கும் ஒரு சோதனை வந்தது.

ஒரு தர்க்கவாதி எதிரில் வந்தான். உன்னுடன் வாதம் செய்ய வேண்டும் என்றான்.

"இவனுடன் வாதம் செய்கிறேன். அது முடிய பலகாலம் எடுக்கும். தர்க்கத்தில் நான் ஜெயித்தால் அங்கே வருகிறேன். இல்லையானால் இவருடைய சீடனாகி விடுவேன்!" என்றார் அவர்.

கடைசியாக அழைக்க வந்த வாலிப லாமா மட்டும் வெறும் கையுடன் திரும்பிப் போனார். அங்கிருந்த மடாதிபதி கேட்டார்.

"எத்தனைபேர் அங்கிருந்து புறப்பட்டீர்கள்?" என்றார்.

"என்னையும் சேர்த்து நூற்றியொன்று" என்றார்.

"நல்லது. நீயாவது திரும்பி வந்தாயே நீதான் எனது வாரிசு. அந்த நூறு பேரில் யாரும் வரமாட்டார்கள்" என்றார். ஏனெனில், இவர் ஒருவர் தான் திரும்பி வருவார் என்று அவருக்குத் தெரியும்.

திபெத் பழமொழி ஒன்று உண்டு.

"நூறு பேர் சொல்லலாம். எப்பொழுதாவது ஒருவன் அபூர்வமாக அடைய வேண்டிய இடத்தை அடைவான்!" என்பது தான் அந்தப் பழமொழி.

ஓர் உன்னதமான இலக்கை அடைய வேண்டுமானால் அது அவ்வளவு சுலபமான காரியம் இல்லை.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# மாணவர் போஷாக்குணவுத்திட்டம் தொடர்பான புதிய சுற்று நிருபம் கல்வியமைச்சினால் வெளியீடு

(கொழும்பு)

நாட்டிலுள்ள பாடசாலைகளில் இரு வகையான மாணவர் போஷணைத் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் திட்டம் நேரடியாக கல்வியமைச்சினால் அமுல்படுத்தப்படுகிறது. இது மஹிந்த சிந்தனை வேலைத் திட்டத்தின் ஓரங்கமாகும்.

'கல்விக்காக உணவு' எனும் மற்றைய திட்டத்தை உலக உணவுத் திட்டம் (WFP) தேசத்தைக் கட்டியெழுப்பும் அமைச்சு மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு உதவியுடன் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

இரண்டு திட்டங்களுக்குமான புதிய திருத்தியமைக்கப்பட்ட 209 /1 ஆம் இலக்க சுற்று நிருபத்தை கல்வியமைச்சு வெளியிட்டுள்ளது.

சகல மாகாண கல்விச் செயலாளர்கள் முதல் பாடசாலை அதிபர்கள் வரை இது அனுப்பப்பட்டுள்ளது. மாணவர் போஷாக்குணவுத் திட்டம் தொடர்பில் ஏலவே வெளியிடப்பட்ட 2007/30 மற்றும் 2008/25 ஆகிய சுற்று நிருபங்களுக்குப் பதிலாக இனிமேல் இப்புதிய சுற்று நிருபமே கடைப்பிடிக்கப்பட வேண்டுமென கல்வியமைச்சு கூறியுள்ளது.

உணவு வழங்கும் திட்டத்தில் தரம் 1-5 வகுப்பு வரையுள்ள தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள், ஜாதிக சவியவின் கீழ்வரும் தெரிவுப் பாடசாலைகள், 100க் குக் குறையாத மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் அடங்கும்.

அவர்களுக்கு வழங்கப்படும் உணவின் வகைகள் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது. அதிபர்கள் அந்தந்த, பாடசாலை அபிவிருத்திச்சபை அனுசரணையுடன் குறிப்பிட்ட உணவை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரியுள்ளது.

முதல் வாரமும் மூன்றாம் வாரம் வார நாட்களில் வழங்கப்படும் உணவுகள் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளன.

திங்கள் - பயறு, கௌபி (தேங்காய்ப் பூவுடன்) மற்றும் உள்ளூரில் கிடைக்கும் பழம் ஒன்று.

செவ்வாய் - மரக்கறி (கரட் / பீன்ஸ் / லீக்ஸ்) சோறு, முட்டையுடன் பாற்சோறு (Kiri bath) மற்றும் பழம்.

புதன் - கருவாட்டுக் கறியுடன் சோறு மற்றும் பழம்.

வியாழன் - முட்டை சலட்டுடன் சோறு மற்றும் பழம்.

வெள்ளி - மரக்கறி கலந்த ரொட்டி (வெங்காயச் சம்பலுடன் பழம் ஒன்று)

இதற்காக ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு 19 ரூபா வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. இரண்டாம் நான்காம் வாரங்களில் மாணவருக்கு வழங்கப்பட வேண்டிய உணவு இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

திங்கள் - பருப்புடன், வேகவைத்த உருளைக்கிழங்கு மற்றும் மஞ்சள் அரிசி அத்துடன் பழம் ஒன்று.

செவ்வாய் - சோறு, பருப்பு மரக்கறிச் சலட்டுடன் பழம்.

புதன் - மரக்கறி கலந்த நூடில்ஸ் முட்டையுடன் பால் சொதி - பழம்.

வியாழன் - கருவாட்டுக் கறியுடன் பிட்டு, பழம்.

வெள்ளி - முட்டைக்கறி அல்லது சோயாக் கறியுடன் வெங்காய சாம்பலுடன் கூடிய இடியப்பம், பழம்.

இத்திட்டத்தில் வழங்கப்படும் 19 ரூபா அடுத்த மாத முற்பகுதிக்குள் வழங்கப்பட்டு விடும். 95% க்கு மேல் மாணவர் வரவு பதிவு செய்யப்பட்டிருப்பின் 100% கொடுப்பனவைப் பெறலாம்.

அடுத்த கல்விக்கான உணவு (Food for Education) திட்டத்தில் தேசத்தைக் கட்டியெழுப்பு அமைச்சு விதந்துரைத்த உணவுகள் மாணவர்களுக்கு வழங்கப்படும்.

இத்திட்டத்தின் படி அரிசி, பருப்பு, சீனி, எண்ணெய் என்பன மாவட்ட செயலகத்தினால் பாடசாலைகளுக்கு வழங்கப்படும்.

அந்தந்த ப.நோ.கூ. சங்கத்தினூடாக இவ் உணவுப் பொருட்கள் பாடசாலைக்கு வழங்கப்படும். மேலதிகமாக சுவையூட்டிக்காக (உப்பு, மிளகாய், கறிவேப்பிலை) ஒரு மாணவனுக்கு ரூ.2 நாள் ஒன்றுக்கு வழங்கப்படும். இவையெல்லாம் பல குழுக்களின் மேற்பார்வையின் கீழ் வழங்கப்படும். (6)



கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி நிகழ்வில் வித்தியாலய அதிபர் த. ரவீந்திரன் தலைமையுரை ஆற்றுவதையும், பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமராட்சி வலயக் கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. புஸ்பலிங்கம், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட நிக்கொட் தாபன பிரதி திட்டப் பணிப்பாளர் செ. சொக்கநாதன் மற்றும் விருந்தினர்களையும் படத்தில் காணலாம்.

## இராசி பலன்

*11.03.2009*
*(மாசி 27, புதன்கிழமை)*
*பூரணை முற்பகல் 8.36 மணிவரை*
*பூரம் முற்பகல் 8.31 மணிவரை*
*இராகுகாலம் 12.22 -1.52 மணிவரை*
*சுபநேரம் 4.52-6.22 மணிவரை*
*திருவள்ளுவர் குருபூஜை*

| | |
|---|---|
| மேடம் | காரிய இடையூறு, மனச் சஞ்சலம், பணக்குறைவு, திடீர் நன்மை. |
| இடபம் | தன்னம்பிக்கைக்குறைவு, தன விரயம்,புதிய திருப்பம், அதிக பிரயாசை. |
| மிதுனம் | நற்கீர்த்தி,பொருள் சேர்க்கை, பிரயாண சுகம், உறவினர் உதவி. |
| கடகம் | போசன சுக்குறைவு, குடும்பக் கவலை, முயற்சி தாமதம், தன விரயம். |
| சிங்கம் | வெகுமானம், ஆன்றோர் ஆசி, புதிய முயற்சி, ரோக பயம். |
| கன்னி | வீண் அலைச்சல், தனவிரயம், உறவினர் மனஸ்தாபம், திடீர் நன்மை. |
| துலாம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், கலந்துரையாடல், தனலாபம், ஆரோக்கியம். |
| விருச்சிகம் | புதிய திருப்பம், இஷ்ட சித்தி, பெரியோர் உதவி, அதிகாரம். |
| தனுசு | சரீரப் பிரயாசை, தந்தை வழி உறவு, பிரயாணம், வீண்பயம். |
| மகரம் | வாகன பயம், எதிர்பாராத மனஸ்தாபம், காரிய தடங்கல், பணக்குறைவு. |
| கும்பம் | குடும்ப நன்மை, காரிய சித்தி, தேகநலன், விருந்துபசாரம். |
| மீனம் | ஆரோக்கியம், பகைவர் நேசம், எடுத்த கருமங்கள் நிறைவேறும், போசன சுகம். |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 70 |
| தக்காளி | 50 | 60 |
| அவரை | 20 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 70 |
| கோவா | 20 | 30 |
| கரட் | 40 | 50 |
| பூசணி | 15 | 40 |
| புடோல் | 20 | 30 |
| வாழைக்காய் | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 30 | 35 |
| பெரிய வெங்காயம் | 40 | 50-60 |
| பாகற்காய் | 25 | 40 |
| வெண்டிக்காய் | 20 | 30 |
| கரணைக் கிழங்கு | 20 | -- |
| பயிற்றங்காய் | 30 | 40 |
| லீக்ஸ் | 80 | 100 |
| போஞ்சி | 20 | 30 |
| கீரை - 1 பிடி | 10 | 15 |
| தேசிக்காய் | 100 | 110 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 30-35 |



வடமராட்சி செவிப்புலனற்றோர் நிறுவன தையல்பயிற்சி நிலைய திறப்பு விழாவில் கலந்து கொண்ட பரு த்தித்துறை பிரதேச செயலர் ஆர். வரதீஸ்வரன் , கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன் ஆகியோருடன் பிரமுகர்களையும், தையல் பயிற்சி நிலையத்தை திறந்து வைத்த கைதடி நவீல்ட் பாடசாலையின் இளைப்பாறிய அதிபர் எஸ் : கோபாலகிருஷ்ணன் நிலையத்தைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:பரு. நிருபர்)

## கற்பித்தலில் தேசியடிப்ளோமா வெளிவாரி இறுதிப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களுக்கான கற்பித்தலில் தேசிய டிப்ளோமா வெளிவாரி இறுதிப்பரீட்சை எதிர்வரும் 30 ஆம் திகதி நடை பெறவுள்ளது.

இப் பரீட்சைக்கான அனுமதியட்டைகளை 23 ஆம் திகதி அன்று பெற்றுக் கொள்ளலாம் எனவும் 14ஆம் திகதி முதல் பரீட்சைக்கான விடுமுறைகள் வழங்கப் படவுள்ளதாகவும் கல்லூரியின் பீடாதிபதி எஸ். யோகநாதன் தெரிவித்துள்ளார். (6-4)

## புதிய நிர்வாக சபை உத்தியோகத்தர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். பிராந்திய இலங்கை தொழில் நுட்பவியல் சேவையாளர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் இவ் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபை உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் தலைவராக ஜ. சிவலோகநாதன், செயலாளராக செ. செல்வானந்தம், பொருளாளராக கு. சிவானந்தன், உபதலைவராக ந. கருணாகரன், உப செயலாளராக க. உதய சூரியர், கணக்காய்வாளராக ஜெ. சக்தி ஜீவன், போஷகர்களாக செல்வி. ச. ஓங்காரமூர்த்தி, வே. கணேசன், கணேசானந்தராசா ஆகியோரும் நிர்வாக சபை உறுப்பினர்களாக வி. புலேந்திரன், எஸ். செந்தூரன், ஏ. ரமணிதரன், ரி. இராஜன், வ. அரியபுத்திரன், பி. தியோஜினஸ், தெ. பாலதாஸ், கே. சுரேந்திரன், ரி. முருகதாஸ், திருமதி. க. சுமதி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (6-2)

## ஏ9 ஊடான பொருட் போக்குவரத்து தொடர்பாக யாழ். செயலகத்தில் விசேட பணிமனை

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

ஏ9 தரை வழிப்பாதை ஊடான போக்குவரத்து தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அப்பாதை ஊடான போக்குவரத்து தொடர்பாக விஷேட பணிமனை ஒன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் யாழ். செயலகத்தில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

யாழ். அரசாங்க அதிபரின் நேரடி கண்காணிப்பின் கீழ் இயங்கவிருக்கும் இப் பணிமனையில் நாட்டின் தென் பகுதியில் இருந்து அவசிய அத்தியாவசிய , கட்டிட நிர்மாண மற்றும் ஏனைய பொருட்களை யாழ். குடா நாட்டிற்கு எடுத்துச் செல்ல விரும்பும் வர்த்தகர்களும் , பொது மக்களும் அதே போல யாழ். குடா நாட்டு விவசாய உற்பத்தி , மற்றும் கடலுணவு, பணம் பொருள் உற்பத்தி உள்ளிட்ட ஏனைய பொருட்களை நாட்டின் தென் பகுதிக்கு அனுப்ப விரும்பும் வர்த்தகர்களும் பொது மக்களும் மேற்படி பணிமனையுடன் தொடர்பு கொண்டு தமது கோரிக்கைகளை சமர்ப்பிக்கும் படி கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

இவ்வாறு வழங்கப்படும் கோரிக்கைகளின் பிரதி நிதி ஒன்றினை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் , வடமாகாண விசேட செயலணித் தலைருமான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அனுப்பி வைக்கும் படி சம்பந்தப்பட்ட வர்த்தகர்களும் பொது மக்களும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (6)

## மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பங்குனிப் பொங்கல் உற்சவம் எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் அடுத்த மாதம் 13 ஆம் திகதி வரை ஐந்து திங்கள் நடை பெறவுள்ளது.

இவ் உற்சவத்தையொட்டிய ஆலோசனைக் கூட்டம் தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஆலயச் சுற்றாடலில் மேற்கொள்ளப்பட வேண்டிய சுகாதாரம், பாதுகாப்பு, குடிநீர் விநியோகம், வாகனங்களின் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்துச் சேவைகள் குறித்து ஆராயப்பட்து.

இலங்கை போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போ, யாழ். டிப்போ மற்றும் தனியார் சிற்றூர்திச் சங்கமும் திருவிழாக் காலங்களில் பக்தர்களின் வசதி கருதி போக்குவரத்துச் சேவைகளை நடத்தவுள்ளன. (6)

## யாழில் மீனைப்பதனிட்டு பொதி செய்யும் தொழிற்சாலை அமைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மீன் பதனிடும் நவீன வசதிகளை உள்ளடக்கிய தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கு ஜீ.ரி.சற் நிறுவனம் விருப்பம் தெரிவித்துள்ளது. யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் மீன் பதனிடும் தொழிற்சாலை செயற்படவுள்ளது.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்தில் வருகை தந்திருந்த ஜீ. ரி.சற் பிரதிநிதிகளுக்கும் யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ப. கிரிதரனுக்கும் இடையே நடை பெற்ற சந்திப்பில் மீன் பதனிடும் தொழிற்சாலையை நிறுவுவதற்கு ஜீ.ரி.சற் நிறுவனம் விருப்பம் தெரிவித்துள்ளது.

பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் யாழ்.குடா நாட்டு மீன்பிடித் தொழிலாளரின் நிலை , இளைஞர்களின் வேலை இல்லாப் பிரச்சினை, யாழ். நகரின் எந்த விதமான தொழிற்சாலையும் இல்லாத நிலைமை என்பனவற்றை சுட்டிக் காட்டி மீன் பதனிடும் தொழிற்சாலையை நிறுவுவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை சமர்ப்பித்து வலியுறுத்தினார்.

கிரிதரனின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட ஜீ.ரி.சற் உயர் மட்ட பிரதிநிதிகள் தொழிற்சாலை நிறுவுவதற்கான சம்மதத்தை வழங்கியுள்ளனர்.

நவீன கருவி சாதனைங்களை உள்ளடக்கியதாக நிறுவப்படவுள்ள தொழிற் சாலை அமைப்பதற்கான ஏற்பாடுகளை கொழும்பு சென்றதும் மேற் கொள்ளுவதாகவும் தொழிற்சாலை அமைப்பது தொடர்பான வேலைகளை கூடிய விரைவில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் ஜி.ரி.சற் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சந்திப்பில் ஜீ. ரி.சற் நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் டாக்டர் டக்மான்லும், பொருளாதார அபிவிருத்தி வேலை வாய்ப்பு அதிகாரி கெடர்ஜக் பக்டாடி ஆகியோர் கலந்து கொண்டனர். (6)




## இதழியல் டிப்ளோமா முழு நேரக் கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீட ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தால் நடாத்தப்படும் இதழியல் டிப்ளோமா முழு நேர கற்கை நெறிக்கு புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களை பல்கலைக்கழக நிர்வாகம் கோரியுள்ளது

இக் கற்கை நெறிக்கு விண்ணப்பம் செய்பவர்கள் கல்வித் தராதர உயர் தரப் பரீட்சையில் சித்தி பெற்றவராகவும் பல்கலைக் கழக அனுமதிக்கு தகுதி பெற்றவர்களாகவும் இருக்க வேண்டும்.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை யாழ்.பல்கலைக்கழக பரீட்சைத் தேர்வுக் கிளையில் பெற்று இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பம் செய்யுமாறு கோரப்பட்டுள்ளது. (6-134)

## சுயதொழில் கொடுப்பனவு

(கோப்பாய்)

வடமாகாண சமூக நலத்துறைத் திணைக் களத்தால் வலி.கிழக்குப் பிரதேச சபைப் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோரில் அங்க வீனர்கள் 6 பேருக்கு சுய தொழில் உதவிக் கொடுப்பனவு நிதி ஒதுக்கீடு செய் யப்பட்டுள்ளது.


இக்கொடுப்பனவில் முதல் கட்டமாக 7 ஆயிரத்து 500 ரூபா வீதம் பிரதேச செயலகத்திற்குக் கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது. (4)

## ஆங்கில மொழி தின போட்டிகள்

(வேலணை)

தீவக வலயப் பாடசாலைகளிடையேயான ஆங்கில மொழித் தினப் போட்டிகளை அடுத்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தி முடிக்க வேண்டும் என தீவக வலய ஆங்கில பாட உதவி கல்விப் பணிப்பாளர் க.கதிரேசபிள்ளை அறிவித்துள்ளார்.

மாணவர்களின் விண்ணப்பங்களை குறித்த திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4)



மானிப்பாய் இந்துக் கல்லூரி தமிழ் மன்ற ஆதரவில் இடம் பெற்ற கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசனின் "நாற்று மேடை "நூல் அறிமுக நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட செங்கை ஆழியான் க. குணராசா மங்கல விளக்கேற்றுவதையும் , நூலாசியர் அருகில் நிற்பதையும் , கவிஞர் சோ. பத்மநாதன் ,எழுத்தாளர் சாந்தன், அதிபர் ச. சிவநேஸ்வரன் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# இலங்கையில் தமிழர் 92

### ஹௌ மக்களும் தமிழ் மக்களும் பொ. ஆ. 300-900

கந்தரோடை தவிர்ந்த ஏனைய யாழ்ப்பாண மாவட்டத்து இடங்களில் அகழ்வாய்வு நடத்தப்படாத காரணத்தால் அம் மாவட்டத்தில் நிலவிய பௌத்த மதம் பற்றி அதிகம் அறிய முடியாதுள்ளது. இதேபோன்று, அம்மாவட்டத்துக்குத் தெற்கே கிளிநொச்சி மாவட்டம், முல்லைத்தீவு மாவட்டம், மன்னார் மாவட்டம் மற்றும் வவுனியா மாவட்டம் ஆகிய இடங்களில் நிலவிய பௌத்தம் பற்றியோ பிற மதங்கள் பற்றியோ அறிவதற்கான சான்றுகள் வெளிப்படுத்தப்படவில்லை. பௌத்தம் மட்டுமின்றிச் சமணம் மற்றும் ஆஜிவிகம் ஆகிய மதங்களும் சைவமும் வட பகுதியில் நிலவியிருக்கும்.

திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் இப்பிரச்சினை குறைவாகவே காணப்படுகின்றது. இங்கு 300 தொட்டு 900 வரையிலான காலப் பகுதியில் காணப்பட்ட பண்பாடு மற்றும் பொருளியில் நிலைகள் பற்றி அறியச் சில சான்றுகள் கிடைத்துள்ளன. இவை கல்வெட்டுக்களாகவும், கட்டிட அழிபாடுகளாகவும் சிற்பங்களாகவும் இலக் கியக் குறிப்புகளாகவும் உள்ளன.

இக்காலப் பகுதியில் திருகோணமலை மாவட்டத்தில் பல்லவப் பேரரசின் செல்வாக்குக் குறிப்பிடத்தக்க அளவில் பரந்திருந்தது. திருகோணமலையும் அதற்கு வடக்கே பல்லவ வங்கம் என்ற துறையும் நாட்டின் முக்கிய துறைகளாக விளங்கின.

இவற்றின் வழியாக வர்த்தகம் மட்டுமின்றி, சமயம், கலைகள் மற்றும் அரசியல் ஆகிய துறைகள் சார்ந்த தொடர்புகள் தென்னிந்தியாவிலிருந்தும் வேறும் பிற வெளி இடங்களிலிருந்தும் இலங்கையுடன் ஏற்பட்டன.

தென்னிந்தியாவில் வலிமையுடன் எழுந்த வணிக கணங்கள் தென்கிழக்கு ஆசியாவுடன் தூர வர்த்தகத் தொடர்புகளைத் துரிதப்படுத்தியபோது திருகோணமலை மாவட்டத்தின் துறைகள் முன்னை விடக் கூடுதலான முக்கியத்துவத்தைப் பெற்றன. இத்துறைகளில் வணிக கணங்களின் குடியிருப்புகள் மட்டுமின்றி, வணிகர்கள் நிறுவிய சமய நிறுவனங்களும் இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

இக் காலப் பகுதியில் மஹாயான பௌத்தம் பல்லவப் பேரரசில் மிகுந்த செல்வாக்குடன் காணப்பட்டது. திருகோணமலை மாவட்டத்தில் திரியாய் என்ற இடத்தில் இக் காலப் பகுதியில் சிறப்புடன் விளங்கிய மஹாயான பௌத்த பள்ளி ஒன்று இருந்தது. அது வணிகர்களுடைய ஆதரவைப் பெற்றுச் செழிப்புற்ற ஒரு நிறுவனம். இதன் பெயர் கிரிகண்ட சைத்தியம். ஆனால் அதற்குப் பொதுப்படத் திரியாய் வட்டதாகே என்ற பெயர். அதன் கட்டிட அமைப்பின் அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ளது.

பல்லவ அரசுக்கும் இந்நிறுவனத்துக்கும் இடையில் இருந்த நெருங்கிய தொடர்பு அங்குள்ள தொல்லியல் சான்றுகளால் உறுதிப்படுத்தப்படுகின்றது. அங்கு கிடைத்துள்ள மஹாயானக் கல்வெட்டு ஒன்று பல்லவ கிரந்த எழுத்தில் சம்ஸ்கிருத மொழியில் எழுதப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாது, அங்குள்ள கட்டிடத்தின் சிற்ப வேலைப்பாடுகள் பல்லவர்களுடைய தனித்துவமான சிற்பப் பாணியின் செல்வாக்கை வெளிப்படுத்துகின்றன.

பல்லவர் தலைநகராகிய காஞ்சியிலிருந்து இலங்கைக்கு ஏழாம் நூற்றாண்டில் சென்ற வஜிரபோதி என்ற மஹாயான பௌத்த துறவி திரியாய்ப் பௌத்த பள்ளி போன்ற கிழக்கு இலங்கைப் பௌத்த பள்ளிகளில் தங்கியிருந்திருப்பார்.

அவர் இலங்கையிலிருந்து சீனாவுக்கும் பயணஞ் செய்தபடியால் கிழக்கிலங்கைத் துறை ஒன்றிலிருந்து சென்றிருப்பார் எனலாம். அவரைப் போன்று இன்னொரு பிரசித்தி பெற்ற மஹாயானத் துறவியாகிய குணவர்மன் என்பவர் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து சில காலம் தங்கியிருந்து தென் கிழக்காசியாவுக்குப் பயணம் ஆனார்.

திருகோணமலை மாவட்டத்தில் கரையோரத்தில் இருந்த இன்னொரு மஹாயான பௌத்த பள்ளி குச்சவெளியில் இருந்த பள்ளியாகும். குச்சவெளிக்குத் தெற்கேயும், கிழக்குக் கரையில் வேறும் மஹாயானப் பள்ளிகள் பல்லவர் செல்வாக்கை வெளிப்படுத்தும் சிற்பங்களுடன் அமைக்கப்பட்டிருந்தன. ஸிதுல்பவு மற்றும் குருக்கள் மடம் ஆகிய இடங்களில் இச் சிற்பங்கள் கிடைத்துள்ளன.

### சைவ நாயன்மார் இயக்கத்தின் செல்வாக்கு

இக் காலகட்டத்தில் வட இலங்கைப் பகுதியில் நடைபெற்ற முக்கிய அபிவிருத்திகளுள் ஒன்று தமிழ்நாட்டுச் சைவ இயக்கத்தின் செல்வாக்குப் பரவிச் சைவ மதம் வலுப் பெற்றமை.

தமிழ் நாட்டிலிருந்து பரவிய மஹாயான பௌத்தத்தின் செல்வாக்கைக் காட்டிலும் நீண்ட கால விளைவுகளை வட பகுதியில் நாயன்மார் இயக்கம் ஏற்படுத்தியது. தமிழ் நாட்டில் போல, இலங்கையின் வட பகுதியில் மஹாயான பௌத்தமும் தேரவாத பௌத்தமும் வீழ்ச்சியடையச் சைவமதம் அங்கு ஆதிக்கம் பெற்றது.

நாயன்மார் இயக்கம் முடிவுற்ற பின்னரும் வட பகுதியில் தமிழ்ப் பௌத்தர்கள் தொடர்ந்து காணப்பட்டாலும், பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியளவில் வட பகுதித் தமிழர்களுடைய தனிமதமாகச் சைவம் எழுச்சியுற்றதைக் காணலாம். இதனால் தமிழ் மொழியும் சைவ மதமும் இலங்கையில் ஆக்கம் பெற்ற தமிழ் இனக் குழுவின் அடை யாளச் சின்னங்களாயின.

இலங்கையில் சிவ வழிபாடு மஹிந்த மஹாதேரர் பௌத்த சங்கம் ஒன்றைத் தேவ, நம்பிய திஸ்ஸ மன்னன் காலத்தில் நிறுவும் முன்னரே நிலவி வந்தது. தேவ நம்பிய

பேராசிரியர்
கா. இந்திரபாலா


திஸ்ஸனின் தந்தை பெயர் பாளி நூல்களில் முடஸிவ எனக் கொடுக்கப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. ஸிவ (சிவன்) என்ற பெயர் வழக்கில் இருந்தமை சிவ வழிபாடு இருந்தமைக்கு அறிகுறியாகும்.

மிகப் பழைய ஆவணங்களாகிய பிராமிக் கல்வெட்டுக்களில் பலர் ஸிவ என்ற பெயருடையோராய்க் காணப்படுகின்றனர். பாளி வரலாற்றேடுகளில் சிவ வழிபாடு அநுராதபுரத்திலும் வேறிடங்களிலும் நடை பெற்றதற்குச் சான்றுண்டு.


(தொடரும்)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை 12



ஒபாமாவின் தந்தை




ஒபாமா எழுதிய 'எனது தந்தையின் கனவுகள்' புத்தகம்

### தந்தையின் மரணச் செய்தி

ஒபாமாவின் 21 ஆவது பிறந்தநாள் வந்து சில மாதங்கள் தான் சென்றிருந்தன. ஒரு நாள் அவருக்கு முன்பின் தெரியாத ஒருவரிடமிருந்து தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது.

நவம்பர் மாதக்குளிர். காலை நேரம்... ஒபாமா தன் காலைச் சாப்பாட்டுக்காக முட்டை பொரித்த வண்ணம் காப்பியை மின்னடுப்பில் தயார் செய்து கொண்டு இருக்கிறார். அப்போது தான் அந்த தொலைபேசி அழைப்பு வந்தது. குரல் தெளிவாக இல்லை.

'பரியா? பரி! இது நீ தானே?

'ஆம்' நீங்கள் யார்?

'ஆம் பரி. இது உன்னுடைய அன்ரி ஜேன். நைரோபியிலிருந்து. நான் பேசுவது கேட்குதா?'

'மன்னிக்க வேண்டும். நீங்கள் யார் என்று சொன்னீர்கள்?'

'அன்ரி ஜேன். நான் சொல்வதைக் கேள் பரி! உன் அப்பா இறந்து விட்டார். அவர் கார் விபத்தொன்றில் கொல்லப்பட்டார். ஹலோ! கேட்கிறதா? உன் அப்பா இறந்து விட்டார் பரி! உனது சித்தப்பா போஸ்ரனில் இருக்கிறார். அவருக்குச் செய்தி கொடு.... நான் பிறகு பேசுகிறேன்.'

அவ்வளவு தான் தொலைபேசி துண்டிக்கப்பட்டது. ஒபாமா தன் படுக்கையில் சாய்ந்தார். அடுப்பில் முட்டை எரிந்த மணம் எங்கும் பரவியது. தனக்கு ஏற்பட்ட நட்டத்தை அளப்பதில் தன்னை மறந்தார்.

தந்தை இறந்தபோது ஒபாமாவுக்கு அவர் விடை தெரியாத புதிராகவே இருந்துள்ளார். அவர் சாதாரண மனிதனிலும் பார்க்க மேலானவரா? அல்லது கீழானவரா? அவர் ஹவாயை விட்டுச்சென்றபோது ஒபாமாவுக்கு இரண்டே வயதுதான். அது நடந்தது 1963 இல். அவருக்குத் தந்தை பற்றி தெரிந்ததெல்லாம் தாயும், பேரனும் பேர்த்தியும் கூறிய கதைகள் ஊடாகத்தான்.

ஆனால் அவை முழுமையான படத்தை தரவில்லை. அங்குமிங்குமாக தையல் போடாத துணியாகத்தான் தோன்றின. ஒபாமாவின் அம்மப்பா தன் இரவுணவுக்குப் பின் நாற்காலியில் சாய்ந்தவண்ணம் ஒபாமாவின் தந்தையின் வீரதீரச் செயல்கள் பற்றி இரைமீட்பார். மகளும் தாயும் கூடவே இருப்பர்.

அம்மாவும் அப்பாவும் ஒருமுறை ஹவாயிலுள்ள தீவகத்திலிருக்கும் பெரிய பாறையைப் பார்க்க ஆபிரிக்க நண்பருடன் சென்றிருந்தார்கள். அப்பா பயங்கரமாக கார் ஓட்டுவார். தவறாக சாலையின் இடக்கைப் பக்கத்தில்தான் ஓடுவார். கொஞ்சமும் பயமில்லாதவர். அவர் சுங்கான் பிடிப்பது வழக்கம் . அவர் புகைப்பதைக் கண்ட நண்பர் தானும் அதில் ஒருமுறையாவது புகைத்துப் பார்க்க ஆசைப்பட்டார்.

ஆனால் அப்பாவுக்கு கொடுக்க மனம் வரவில்லை. அதற்குக் காரணம் அந்த சுங்கான் அவருக்கு அவரின் பிறந்தநாள் பரிசாக ஒபாமாவின் தாத்தாவால் வழங்கப்பட்டது. ஆகையினால் அவர் அதில் அளவுகடந்த பெருமையும் வாஞ்சையும் வைத்திருந்தார்.

எனினும் அடுத்த கணம் கொடுத்துவிட்டார். நண்பர் புகைத்துக் கொண்டிக்கும் போது கடுமையாக இருமினார். அவ்வளவு தான் சுங்கான் பாறையைச்சுற்றிப் போட்டிருந்த கம்பித்தடுப்பு வேலியைத்தாண்டி அதலபாதளத்தில் விழுந்துவிட்டது. நண்பனோ அண்மையில்தான் ஆபிரிக்காவிலிருந்து வந்துள்ள புதிய மாணவன்.

அவர் இருமி முடிக்கும் வரையும் பொறுமையாக இருந்தார். இருமல் நின்றதும் அவரைப் பார்த்து அந்த 90 பாகை சரிவுடைய பாறையில் இறங்கி அந்த சுங்கானை மீட்டு வருமாறு கண்டிப்பான குரலில் கூறினார்.

அவரோ குனிந்து பார்த்ததும் அசந்து போனார். தன் பரிதாபமான நிலையிலிருந்து தப்ப அது போல புதிய சுங்கான் வாங்கித் தருவதாகக் கூறினார். ஆனால் அப்பாவோ விடாப்பிடியாக தன்னுடையதைத்தான் மீட்டுத்தரவேண்டும் என்று அடம்பிடித்தார். மீண்டும் நண்பர் கம்பிவேலியால் எட்டிப்பார்த்துவிட்டு 'முடியாது' என்று தலையை அசைத் தார். அவ்வளவு தான் அடுத்த கணமே நண்பர் அப்பாவின் கையில் பந்தாக ஆடினார். கீழே தூக்கி எறியப் போகி றாரோ என்று எல்லோரும் நடுங்கிப் போனார் கள்.

அம்மா அழுது அவரைக் கீழே விடும்படி கெஞ்சிக் குழறினாள். இந்தக் காட்சி பற்றி ஒபாமா "நீதியின் பயங் கர மான தோற்றம்" என்று தன் சுயசரி தையில் பிற்பாடு குறிப்பிடுகிறார். சிலநிமி டங்களின் பின் அப்பா தன் நண்பரை நிலத் தில் விட்டுவிட்டு அவர் முது கில் தட்டி ஆறுதல் கூறி அவரையும் அழைத்துக் கொண்டு பியர் குடிக்க சென்றார். அதன் பின் ஏதும் நிகழாதது போல நடந்து கொண்டார்.

அம்மா அப்பாவுடன் சில காலம் பேசு வதை நிறுத்திக்கொண்டாள். ஒரு நாள் அம்மா தன் பெற்றோருக்கு நடந்ததை படபடப்புடன் சொல்லிக்கொண்டிருந்தாள். அப்போது அப்பா இடைமறித்து சாந்தி! சாந்தி! நான் அவனுக்கு ஏன் அப்படிச்செய்தேன் தெரியு மா? மற்றவர்களின் பொருளை ஒருவர் பயன்படுத்தும்

ஜம்பொன்

போது பொருத்தமான மிகுந்த கவனத்தோடு பயன்படுத்த வேண்டும் என்ற பாடத்தை புகட்டவே.தண்டனை கொடுப்பது போல நடித்தேன் என்றார்.

ஒபாமாவின் அம்மா அப்பாவைப் பற்றி கூறும்போதெல்லாம் அவர் கொஞ்சம் ஆதிக்கம் செலுத்துபவர். அதற்கு அவரின் அடிப்படைக் குணமான நேர்மைதான் காரணம். ஆகவேதான் சிலவேளைகளில் அவரால் விட்டுக்கொடுக்க முடியாதிருந்தது.

(தொடரும்)

# இலங்கையில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்த ஜப்பான் உதவ வேண்டும்

## பழ.நெடுமாறன் வேண்டுகோள்

(சென்னை)

இலங்கைக்கு ஜப்பான் அளித்து வரும் உதவிகளை நிறுத்தாவிட்டால் உலகம் முழுவதும் வாழும் 10 கோடி தமிழர்கள் ஜப்பான் நாட்டின் பொருட்களை புறக்கணிப்பார் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் நிறவனர் மருத்துவர் இராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட ஜப்பான் அரசு உதவி செய்ய வேண்டும் என்று சென்னையில் உள்ள ஜப்பான் துணைத் தூதுவரிடம் இலங்கை தமிழர்கள் பாதுகாப்பு இயக்கத்தினர் நேரில் கோரிக்கை மனு அளித்தனர். இலங்கையில் உடனடியாக போர் நிறுத்தம் ஏற்படவும் இந்தியா அளித்து வரும் இராணுவ உதவி உள்ளிட்ட அனைத்துவிதமான உதவிகளையும் நிறுத்த வலியுறுத்தியும் இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கத்தினர் பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்த பிரச்சினையில் உலக நாடுகள் தலையிட்டு நடவடிக்கை எடுக்கும் வகையில் சென்னையில் உள்ள அமெரிக்க தூதுவர், பிரித்தானியா துணை தூதுவர் ஆகியோரையும் நேரில் சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர்.

இந்த நிலையில் இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்க தலைவர்கள் பழ.நெடுமாறன், வைகோ, மருத்துவர் இராமதாஸ் ஆகியோர் சென்னையில் உள்ள ஜப்பான் துணைத் தூதுவர் கசுவோ மினோகேவாவை நேற்று முன் தினம் சந்தித்து கோரிக்கை மனு கொடுத்தனர். பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் ஜி.கே.மணி இந்திய கம்யூனிஸ்ட் மாநில துணைத் தூதுவரிடம் 30 நிமிடத்துக்கும் மேலாக விவாதித்தனர்.

சந்திப்பின் பின்னர் பழ.நெடுமாறன் நிருவர்களிடம் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் உடனடியாக போர் நிறுத்தம் ஏற்பட ஜப்பான் அரசு உதவி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி ஜப்பான் துணை தூதுவரிடம் விண்ணப்பம் கொடுத்தோம். இலங்கை தமிழர் பிரச்சினை குறித்து அவரிடம் விரிவாக எடுத்துச் சொன்னோம். போர் நிறுத் தம் ஏற்பட உதவி செய் வேண்டிய கடமை ஜப் பானுக்கு உண்டு.



இலங்கைக்கு அதிக அளவில் நிதி யுதவி செய்யும் வெளிநாடு ஜப்பான் இலங்கை பௌத்த நாடு என்ற அடிப்படையில் இந்த உதவிகளை ஜப்பான் செய்கிறது.

ஆனால், ஜப்பான் கொடுக்கும் நிதிய தவிகளை இலங்கை ஆயுதங்களை வாங்கி குவித்து தமிழ் இனப்படுகொலை செய்து வருகிறது. இந்திய தேசிய இராணுவம் அமைத்த நேதாஜி ஜப்பானுக்கு துணை நின்றார்.

எனவே ஜப்பான் அரசு இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட உதவி செய்ய வேண்டும் அதற்கு இலங்கை அரசு மறுத்தால் இலங்கைக்கு வழங்கப்படும் அனைத்து விதமான உதவிகளையும் ஜப்பான் நிறுத்த வேண்டும் என்றார் பழ.நெடுமாறன். (6)

## சட்டக்கல்லூரியை திறக்கக்கோரி மாணவர்கள் திடீர் போராட்டம்

(சென்னை)

இலங்கைத் தமிழர்களைக் காக்க வலியுறுத்தி தமிழ் நாட்டில் சட்டக்கல்லூரி மாணவர்களின் போராட்டம் தீவிரமடையத் தொடங்கியதை அடுத்து தமிழகத்தில் உள்ள அனைத்துக்கல்லூரிகளையும் கால வரையறையின்றி மூடுவதற்கு தமிழக அரசு உத்தரவிட்டது.சில வாரங்கள் கழித்து கலைக் கல்லூரிகள் அனைத்தும் திறக்கப்பட்டன.

சென்னை சட்டக்கல்லூரி மட்டும் இன்னும் திறக்கப்படவில்லை. இந்நிலையில் சட்டக்கல்லூரியை மீண்டும் திறக்கக் கோரி 2 மாணவிகள் உள்ளிட்ட 22 மாணவர்கள் கல்லூரி வளாகத்தில் திடீர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் பொலிஸாரும் கல்லூரி நிர்வாகத்தினரும் மாணவர்களிடையே சமாதானப் பேச்சு நடத்தினர்.

அப்போது கல்லூரியை விரைவில் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதிய ளிக்கப்பட்டது.

இதையடுத்து மாணவர்கள் கலைந்து சென்றனர். (6)

## இந்திய தலைவர்களின் பயணத்துக்கு அதி நவீன விமானங்கள்

(புதுடில்லி)

இந்திய தலைவர்களின் சுற்றுப்பயணத்துக்காக 3 அதிநவீன விமானங்கள் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டுள்ளன இதில் ஒரு விமானம் ஜனாதிபதிக்கும் மற்றொரு விமானம் பிரதமருக்கும் வழங்கப்படவுள்ளது. 3ஆவது விமானம் வெளிநாட்டு தலைவர்கள் வருகையின் போது பயன்படுத்தப்படவுள்ளது.

பல நூறுகோடி ரூபா செலவில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த விமானங்கள் அமெரிக்க ஜனாதிபதியின் ஏர்போர்ஸ் ஒன் விமானத்துக்கு இணையான வசதிகளைக் கொண்டது.

இந்த அதி நவீன விமானத்தில் பிரதமருடன் 48 பேர் பயணம் செய்ய முடியும்.

ஒரே நேரத்தில் நிற்காமல் 6 ஆயிரம் மைல் பறக்கக் கூடியது. இந்த விமானத்தில் பறந்த படியே உலகின் எந்த பகுதியில் இருப்பவருடனும் பேச முடியும். அவசர காலத்துக்கு ஏற்ப இயங்கும் வகையில் இதன் என்ஜின்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

எதிரிகளின் ஏவுகணைகளால் இந்த விமானத்தை நெருங்க இயலாது இந்தமாத இறுதியில் இருந்து இந்த விமானம் பயன்பாட்டுக்கு வரவுள்ளது. ஜனாதிபதி பிரதிபா பட்டீல் இதன் சேவையைத் தொடங்கி வைக்கவுள்ளார். (6)

## பிள்ளையானின் சில கோரிக்கைகள் புலிகளின் கோரிக்கைகளுக்கு நிகரானது

### கருணா தெரிவிப்பு

கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையானினால் மத்திய அரசாங்கத்திடம் விடுக்கப்பட்டுள்ள சில கோரிக்கைகள் தமிழீழ விடுத லைப் புலிகளின் கோரிக்கைக ளுக்கு நிகரான தென அமைச்சர் கருணா தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பினர் கடந்த வாரம் தம்மிடமிருந்த ஆயுதங்களை அரசாங்கத்திடம் ஒப்படைத்திருப் பதைக் கொண்டு அவர்களிடம் வேறு ஆயுதங்கள் இல்லையென்ற முடிவுக்கு வரவும் முடியாதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆயுத ஒப்படைப்பின் போது கைத்துப்பாக்கிகள் எதனையும் பிள்ளையான் த்ரப்பு ஒப்படைக்கவில்லை எனவும், கைத்துப்பாக்கிகளைக் கொண்டே கப்பம் கோரல் மற்றும் கடத்தல் சம்பவங்களை பிள்ளையான் குழு கிழக்கில் அரங்கேற்றி வருவதாகவும் கருணா குற்றம் சுமத்தியுள்ளார்.

மேலும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் பிள்ளையான் தரப்பில் வெறும் நான்கு பேர் மட்டுமே எஞ்சப் போவதாக அவர் தெரிவித்துள்ளார். பிள்ளையான் குழுவினரைப் போன்று தம்மிடம் எவ்வித ஆயுதங்களும் இல்லை எனவும், இதனால் ஆயுதக் களைவு குறித்து கவலைப்பட வேண்டிய அவசியமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்திற்கு காணி மற்றும் காவல் துறை அதிகாரங்கள் வழங்கப்பட்டால் அது பிரச்சினையை உருவாக்கும் எனவும், இதனால் சிங்கள சமூகத்துடன் பிணக்குஏற் படக் கூடும் எனவும் கருணா தெரிவித்துள்ளார். (6)

## பூபாலசிங்கம் புத்தகசாலை உரிமையாளர் ஸ்ரீதர் சிங்கை அமைச்சர்கள் சென்று பார்வை

(கொழும்பு)

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள பூபாலசிங்கம் புத்தக நிலைய உரிமையாளர் ஸ்ரீதர் சிங் மற்றும் அவரிடம் தொழில்புரியும் எஸ்.சுதர்சன் ஆகியோரை விடுவிப்பதற்கான சகல ஏற்பாடுகளையும் உயர்மட்ட பொலிஸ் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு மேற்கொண்டுள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரும் வாழ்க்கைத்தொழில், தொழில்நுட்ப பயிற்சி பிரதி அமைச்சருமான பெ.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கல்கிசை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர்களை நேற்று முன் தினம் காலை நிர்மாணத்துறை இயந்திரவியல் சேவை அமைச்சர் ராஜித சேனாரத்னவும், பிரதி அமைச்சர் பெ.ராதாகிருஷ்ணனும் நேரில் சென்று பார்வையிட்டு ஆறுதல் கூறியதுடன் விடுதலைக்கான சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளதாக அவர்களிடம் தெரிவித்தனர்.

இந்தியாவில் பிரசுரிக்கப்படும் ஆனந்த விகடன் பிரதிகளை விமான மூலம் யாழ். நகருக்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்து அவற்றை விமான நிலையத்தில் ஒப்படைத்த சுதர்சன் கைது செய்யப்பட்டதை அடுத்து விநியோகத்தரான ஸ்ரீதர் சிங்கும் கடந்த ஐந்தாம் திகதி கல்கிசை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

குறிப்பிட்ட பிரசுரத்தில் விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனின் படம் பிரசுரிக்கப்பட்டிருந்ததை அறிந்து சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இவர்கள் தொடர்பான நியாயத்தை பிரதி அமைச்சர் இராதகிருஷ்ணன் சகல உயர் மட்ட பொலிஸாரிடமும் எடுத்துக்கூறியதுடன் படம் அச்சிடப்பட்டதற்கும் மற்றைய செய்திகளுக்கும் இவர்களுக்கும் தொடர்பு இல்லை என்றும் விளக்கமளிக்கப்பட்டது. அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு இது தொடர்பாக பிரதி அமைச்சர் கருத்து தெரிவித்ததை யடுத்து நேற்று முன் தினம் காலை அமைச்சர்கள் இருவரும் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று கைதானவர்களுக்கு ஆறுதல் தெரிவித்தனர்.

இதேவேளை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுடர் ஒளி ஆசிரியர் வித்தியாதரன் தொடர்பாக பொலிஸ்மா அதிபரை அமைச்சர்கள் சந்திப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் தெரிவித்தார். (6)

## இலங்கையில் யுத்த நிறுத்தம் அமுல்படுத்தப்பட வேண்டும்

### நியூசிலாந்து தொழிற்கட்சி கோரிக்கை

முல்லைத்தீவில் இடம்பெறும் யுத்தம் காரணமாக பொதுமக்கள் பேரவலத்தை எதிர்நோக்கியிருப்பதாகவும் இங்கு உடனடியாக யுத்தநிறுத்தம் அமுல்படுத்தப்பட வேண்டும் எனவும் நியூசிலாந்து தொழிற் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

யுத்தம் காரணமாக பாரிய மனிதாபிமான பிரச்சினை உருவாகியுள்ளதாகவும் இந்த யுத்தத்தில் ஈடுபட்டுவரும் தரப்பினர் உடனடியாக யுத்த முன் நகர்வுகளை நிறுத்திக்கொள்ள வேண்டும் எனவும் தொழிற்கட்சியின் வெளிவிவகாரப் பேச்சாளர் கிராண்ட் ரொபேர்ட்சன் தெரிவித்துள்ளார்.

வன்னியில் பாதிக்கப்பட்டுள்ள பொது மக்களுக்கு உணவு மற்றும் மருந்துப்பொருட்களை தடையின்றி வழங்க தொண்டு நிறுவன ஊழியர்கள் குறித்த பிரதேசங்களுக்குச் செல்ல அனுமதி அளிக்கப் படவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

இலங்கையில் மனிதாபிமான பேரவலத்தை தடுத்து நிறுத்த நியூசிலாந்து அரசாங்கம் குரல் கொடுக்க வேண்டும் என தொழிற் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது. (6)




கோண்டாவில் சமுத்தி வங்கி நடாத்தும் கிராம மட்ட தலைமைத்துவ பயிற்சி நெறி யாழ். கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடை பெற்றது. இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக மக்கள் வங்கி முகாமையாளர் ந.நாகேஸ்வரன் மங்கல விளக்கேற்றுவதையும்,யாழ்.கோண்டாவில் இந்துமகா வித்தியாலய அதிபர், நல்லூர் பிரதேச செயலாளர் பா.செந்தில்நந்தனன் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-அலுவல கச்செய்தியாளர்)

# ஓய்வுபெற்ற அரச ஊழியர்கள் ஓய்வூதியத்துக்கு மேலதிகமான சம்பளத்தை பெற்றுக்கொள்ள முடியும்

(கொழும்பு)

சேவையில் இருந்து இளைப்பாறிச் செல்லும் அரசாங்க ஊழியர்கள், ஆசிரியர்கள் 2006 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பெற்றுக் கொள்ளாத விடுமுறை நாட்களுக்கு சேவையாற்றி ஓய்வூதியத்துக்கு மேலதிகமான சம்பளத்தையும் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டதன் பிரகாரம் 2006 ஆம் ஆண்டு அரசாங்க ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு மேலதிகமாக (13ஆவது மாதம்) ஒரு மாதச் சம்பளம் என்ற வகையில் பெற்றுக் கொள்ளாத லீவு நாட்களுக்கு கொடுப்பனவு வழங்கப்பட்டது.

2007 ஆம் ஆண்டு அந்த நடைமுறை இடை நிறுத்தப்பட்டு சேவையாற்றும் போது பெற்றுக்கொள்ளாமல் இருக்கும் லீவு தினங்களின் எண்ணிக்கைக்கு சமமான காலம் மேலதிகமாக 61வயது வரை கடமை புரிந்து ஓய்வூதியத்துக்கு புறம்பாக சம்பளத்தை பெறுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சில் 24/2007 சுற்றறிக்கையில் பெற்றுக் கொள்ளாத லீவுக்கு மேலதிகமாக கடமையாற்றி ஊதியம் பெறும் நடைமுறை விபரிக்கப்பட்டுள்ளது.

2007 ஆம், 2008 ஆம் ஆண்டுகளில் பெற்றுக் கொள்ளாமல் மிகுதியாக இருக்கும் லீவு நாட்களின் எண்ணிக்கை விபரத்தை சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவரின் உறுதிப் படுத்தலுடன் பி-100 படிவத்தில் பெற்று அதற்கான விண்ணப்பப் படிவத்தின் மூலம் திணைக்களப்பணிப்பாளர் ஊடாக மாகாண மத்திய அமைச்சின் அனுமதிகளைப் பெற்று ஓய்வு பெறும் போது கடமையாற்றிய அலுவலகத்தில் அல்லது பாடசாலையில் தொடந்து கடமை புரியலாம்.

30 தினங்கள் பெற்றுக் கொள்ளாத லீவு இருப்பின் ஒரு மாதமும் 60 தினங்கள் இருப்பின் 2 மாதமும் அதேபோன்று இருக்கின்ற ஒவ்வொரு தினத்திற்கும் மேலதிகமாக கடமை புரிந்து அதற்கான ஊதியத்தை மேலதிகமாக பெற்றுக்கொள்ளலாம்.

சம்பந்தப்பட்டவர்கள் 2009 ஆம் ஆண்டும் அதற்குப் பின்னரும் இதே நடைமுறையில் பெற்றுக்கொள்ளாத லீவுக்கு மேலதிகமாக கடமை புரிந்து அதற்குரிய ஊதியத்தையும் மேலதிகமாக பெற்றுக் கொள்ளலாம்.

உரிய முறையில் முன் அனுமதி பெற்றுக் கொண்ட பின்னர் கடமை புரியுமிடத்துத்தான் கடமை நாளுக்குரிய ஊதியத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

எனவே சேவையில் இருந்து ஓய்வு பெறுவதற்கு குறித்த தினத்திற்கு முன்னர் விண்ணப்பித்து அனுமதியை உரிய வேளையில் பெறுவது மேலதிக கொடுப்பனவை பெறுவதற்கு இலகுவாக இருக்கும் என மூத்த தொழிற் சங்க பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (6)

## கோத்தபாய சீனா விஜயம்

இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டு நாடு திரும்பியுள் ளார்.

கடந்த பெப்ரவரி 28ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை கோத்தபாய ராஜபக்ஷ சீனா சென்றிருந்தார். அவரின் சீன விஜயத்தின் போது இரு நாடுகளுக்குமிடையிலான இராணுவ ஒத்துழைப்புக்கள் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

கோத்தபாய ராஜபக்ஷ தனது சீன விஜயத்தின் போது சீனாவின் இராணுவத் தளபதி மற்றும் சீனாவின் தேசிய பாதுகாப்பு பிரதியமைச்சர், உள்ளிட்ட முக்கியஸ்தர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். விடுதலைப்புலிகளுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் இராணுவ நடவடிக்கைகளில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளில் சீனாவும் முக்கிய இடத்தை வகிக்கிறது. (6)

# அமெரிக்க- பசுபிக் கட்டளைப் பிரிவின் ஆய்வுக்குழு அண்மையில் இலங்கை விஜயம்

## அமெ.தூதரகம் தகவல்

(கொழும்பு)

அமெரிக்கா மற்றும் இலங்கை நாடுகளுக்கு இடையிலான மனிதாபிமான ஒத்துழைப்புக்களுக்கு அமைவாக அமெரிக்க- பசுபிக் கட்டளைப் பிரிவின் ஆய்வுக்குழு ஒன்று அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்ததாக அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்தக் குழுவினர் இலங்கையில் இருந்த காலத்தில் அமெரிக்காவினால் இலங்கைக்கு வழங்கக்கூடிய மனிதாபிமான உதவிகள் தொடர்பில் அமெரிக்கத் தூதரகம் மேற்கொண்ட ஆய்வுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியதாக அமெரிக்கத் தூதரகத்தின் ஊடக மற்றும் கலாசார விவகாரப் பணிப்பாளர் அண்டர் ஸன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வடக்கில் சிக்கியுள்ள பொது மக்களை பாதுகாப்பாக மீட்பதற்காக அமெரிக்க கடற்படைக் கப்பல்கள் இலங்கை வரவுள்ளதாகவும் அது தொடர்பான பேச்சுவார்த்தைகளில் இந்திய வெளியறவுச் செயலர் சிவ்சங்கர் மேனனுடன் அமெரிக்க நிர்வாகம் ஈடுபட இருந்ததாகவும் வெளிவந்த தகவல்கள் தொடர்பில் வினவப்பட்ட போதே அமெரிக்கத் தூதரகம் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்காவின் பசுபிக் கட்டளைத் தலைமையகத்தைச் சேர்ந்த கடற்படைப் பிரிவானது அமெரிக்க கடற்படை மற்றும் விமானப் படையினர் உதவியுடன் இலங்கைக்குச் செல்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் ஆராய பசுபிக் கட்டளைத் தலைமையகக் குழு ஒன்று அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்ததாகவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந் நிலையில் இவ்விடயம் தொடர்பில் கருத்து வெளியிட்ட அமெரிக்கத் தூதரக ஊடக மற்றும் கலாசார விவகாரங்களுக்கான பணிப்பாளர் வடக்கில் சிக்கியுள்ள பொது மக்களை மீட்பது தொடர்பில் இலங்கை அரசாங்கம் எந்தவிதமான ஆயுத உதவிகளையும் கோரவில்லை என்று அவர் கூறினார். (6)

# நிஜத்தின் முகம்........ நிஜத்தின் முகம்..........

## 'யாழ்ப்பாணத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் அவலங்களைக் காட்டும் உண்மைச் சம்பவங்கள்'

யாழ்ப்பாண பண்பாட்டின் மையம் கல்வி. ஒவ்வொரு பெற்றோர்களும் தமது பிள்ளைகளை படிப்பித்திட எடுக்கும் முயற்சி அளவற்றது. பெற்றோர்களின் ஊக்கத்தினா லும் அயராத உழைப்பினாலும் புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த.சாதாரணம் போன்ற பரீட்சைக்கு முகம் கொடுப்பதற்காக பாடசாலைக் கல்ஸ்ரீயும் இதுவேயாகும்.

சமூகத்தில் நல்லதொரு மாணவ சமூகம் உருவாகுமா

# நம்பிக்கை மாறுமா?

யின் நல்லதொரு விடியல். மாணவிகளை கல்வி அறிவியலூடாக வளர்த்துவிட்டால் ஆரோக்கியமான விடிவு. கல்வியானது மனித ஆளுமை விருத்தியில் மிக முக்கியமான இடத்தினைப் பெறு கின்றது. பெற்றோர்களும் பெண்பிள்ளைகள் என்றாலும் படிக்கவேண்டும், என்னுடைய பிள்ளை சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்ற கனவுகளுடன் பணத்தினை செல வழித்து படிப்பிக்க முயற்சிக்கின்றனர்.

பெற்றோர்களின் கனவுகளை நன வாக்கி டொக்ராகி விடணும் என்ற இலக்குடன் படித்து வந்த சுமித்திராவின் வாழ்வின் நகர்வில் ஏற்பட்ட சம்பவம்.

வடமராட்சி பகுதியில் வாழ்ந்து வருகின்ற மதிவதனி என்ற அழகிய பெண்ணிற்கு வரன் கிடைப்பதற்காக பெற்றோர்களின் முயற்சியும், உறவினர்களின் முயற்சியும் தேடுதலில் ஆரம்பமானது. பணம், அழகு, குணம் எல்லாம் கிடைக்கப் பெற்ற மதிவதனி நல்லதொரு கணவன் கிடைக்கப்பெற்றால் நல்லதொரு குடும்பமாகிவிடும் என்று கற்பனை கனவுகளில் மிதந்து திருமணத்தில் இணைந்துகொள்ள ஆயத்தமாகிறாள்.

சாதகப் பொருத்தமும் 80 வீதம் பொருந் திவிட மாப்பிள்ளையும் மாஸ்ரர் உத்தியோகமாம். பெடியன் நல்ல குணமும், அழகுமாம். செய்யுங்கோ என்ற கலியாண தரகரின் ஒற்றைக் காலில் நின்று அடம்பிடித்த கூத்து மதிவத னியின் பெற்றோர்களின் உடன்பாட்டிற்கு வழி வகுத்தது.

பெற்றோர்களும் எங்கேயோ ஒருவன் கண வனாக படைக்கப்பட்டுள்ளான் என் மகளுக்கு என்ற ஏக்கம் தீர்ந்து போக திருமண வைபவம் கலைக்கோலம் போட்டு இருவரும் இல்லறத்தில் இணைந்து கொண்டனர். இல்லறவாழ்வில் பிள்ளைகளைப் பெற்று இரு குழந் தைகளுடன் இன்பமாக ஓடியது. காலங்களும் உருண்டோடிட பாடசாலைக்குச் சென்று கற்பிக்கும் நேரத்தினை விட மாலை நேரங்களிலும் காலை நேரங்களிலும் வகுப்புகளை ஆரம்பித்தால் பணத்தினை சம்பாதித்து உழைத்திட எண்ணிய காந்தன் கணித பாடத்திற்காக வீட்டில் விசேட வகுப்பினை ஆரம்பித்தான் . கணித பாடத்திற்கு எமது மாணவர்கள் ரியூசன் கல்வியுடன் மட்டும் நிற்காமல் பிரத்தியேக வகுப்பு என்று செல்வது வழமையே. இதனால் அக்கிராம மாணவர்கள் மட்டுமன்றி அயற் கிராமத்தவர்களும் கணித பாடத்திற்கு வந்து சென்றார்கள்.

கணவனின் அயராத முயற்சியைக் கண்டு மனைவியும் அவர்களது உறவினர்களும் அடிக்கடி மெச்சிக்கொள்வார்கள்.

காந்தனிடம் வரும் மாணவர்களுள் அதிகமானவர்கள் பெண் பிள்ளைகள் அவர்களின் இளமை துள்ளும் வதனமும், குறும்புத்தனமும் விருப்பத்தை ஏற்படுத்த மனமும் திசை திரும்பியது. கள்ள எண்ணத்தில் எங்கட சேர் இருக்கார் என மன உறுதியில் இருந்த மாணவிகள் மீது இடையிடையே தனது சேட்டைகளை ஆரம்பிக்க தொடங்கினான் காந்தன். கொப்பிகளை திருத்தச் செல்லும் போது கைகளில் தொட்டு உரசுவதும் என்னடி சுமித்திரா என்று முகத்தில் கிள்ளுவதுமாக ஆரம்பமான அவரது ஆசைகள் அளவு கடக்கலாயிற்று.



சுமித்திராவின் அழகும் அவனின் குறும்புத் தன மும் காந்தனின் சிந்தனைக்கு விரசமாக மாறியது. சுமித் திராவின் திறமையால் கணக்கை உடனே செய்து காட்டியது. அருகில் உள்ளவர் களுடன் தனகுவதும் மற்றவர்கள் செய்து முடிப்பதற்கு முன் சுமித்திராவின் அரு கில் காந்தன் சேர் அதிகம் நிற்பதற்கும் வாய்ப்பு ஏற்பட்டது. சின்னப் பிள்ளைகள், பக்குவம் கூட அடைந்து இருக்காத வயது, வீட்டிலும் ஆண் சகோதரர்களுடன் கூடிப் பழகிய தன்மையால் ஆடவர்கள் ஏமாத்துவர்கள், கள்ளம் உள்ளவர்கள் என நோக்காது காந்தனின் செய்கையை கருத்தில் கொள்ளாது தனது படிப்பில் கண்ணாக இருந்த சுமித்திரா மீது ஆசை கொண்டான். மனைவியான மதிவதனியும் காந்தன் தனது மாணவிகளுடன் பழகுவதை தப்பாக எண்ணாது கணவருக்குரிய கடமைகளை செய்து கொடுப்பதும் தனது அலுவலக வேலையுடன் வீட்டுவேலை, பிள்ளைகளின் வேலை கணவனின் வேலை .... என அவளுக்கு.

சந்தேகிக்காத மனைவிக்கு எப்போது சந் தேகம் உண்டாகப் போகிறது. காலை வகுப்பு நடந்து கொண்டிருக்கும் போது தனது கண வருக்கு ரீ கொண்டு சென்ற சந்தர்ப்பத்தில் மாணவியின் அருகில் நிற்பதை கவனித்த மதிவதனி என்ன கொப்பி திருத்துறாரா? என்று பார்க்கும் போது சட்டைபின்கழுத்து பெரிது என்பதால் குனிந்து எழுதிய மாணவியை உற்றுப்பார்ப்பதை அவதானித்து விட் டாள். கையில் இருந்த ரீ கப் உம் தளர்ந்து ஆடத்து வங்கியது. தன்னிலை அறியாது சிலையாகி சீ இப்படி நடந்திருக்காது கனவா? பொய் கட வுளே என் கணவன் மீது நான் கொண்டுள்ள நம்பிக்கைதானோ எவ்வளவு?... என்று மனப்போராட்டத்தின் மத்தியில் ரீ யையும் கொடுக்காது திருப்பிக் கொண்டு சென்ற அவள் விறைத்து போனாள். சுமித்திராவும் எதனையும் உணராதும் பொருட்படுத்தாதும் கல்வியில் சிரத்தையுடன் விளங்குவதால், O/L பரீட்சைக்கு நிறு வல் கணக்கை செய்து முடித்து அதி உச்சப் புள்ளியைப் பெற்றிட தினமும் அதிகப் பிரயத் தனம்.

வகுப்பில் காந்தன் ஆசிரியர் கூறினார் ***விளங்கவில்லை என்றால் வந்து கேளுங் கள் பிள்ளைகளே....*** இவ் வார்த்தை ஞாபகம் வர அவளும் காந்தன் சேர் வீடு நோக்கி போகும் போது மனைவியோ, பிள் ளைகளோ இல்லாத சந்தர்ப்பம் மிகவும் சாத கமாக அமைந்திட தனது ஆசைகளை அம் மாணவி சுமித்திரா மீது திணிக்க முற்பட்டார். எதற்கும் உடன் படாத அவள் மூச்சு திணறி ஓட வழி தெரியாது தத்தளித்து கொண்டிருந் தாள்.

ஐயோ வேண்டாம் சேர் நான்...நான் கணக்கை கேட்க தான் வந்தேன்... என்று சொல்லவும் முடியாது அழவும் முடியாது பயத்தால் செய்வதறியாது அங்கும் இங் கும் நிற்பதை சாதகமாகப் பயன் படுத்திய காந் தன் தனது இச் சைகளை சுமித் திராவின் மயக்கத்தில் நிறைவேற்ற தனது பிள் ளைகளை ரீயூசனிலிருந்து கூட்டி வந்த மனைவி திகைத்து மயக்கமுற்றாள். காந்தனின் நாடகமோ சுமித்திராவிற்கு ஏற்பட்ட நிலையில் இருந்து வெளிவந்தது.

கல்விக்கும் முற்றுவைத்துவிட்டு கொழும் பில் இருக்கும் சுமித்திரா அங்கு மன நோயாளியாக சிகிச்சை பெற்று வருவதையும், காந்தன் மனைவி மதி வதனியை திட்டிக் கொட்டி அடிப்பதும் மனைவி காந்தன் மீது கொண்ட அன்பும் அற்றுப் பிரிந்து- பிரியாத உறவாக வாழும் கசப்பான விரக்தி வாழ்க்கை.

துதிகா

சிறுவயது பருவம் தெரியாத, மங்கையர்கள் மீது தமது வெறிகளை பிரயோகித்து எதற்கும் உடன்படுவார்கள், யாருக்கும் சொல்ல மாட்டார்கள் என்ற சிந்தனையில் செய்யும் சேட்டைகளுக்கு இடமளிக்காது எது வானலும் உங்கள் பெற்றோர், பாது காவலர், சகோதரர், சகோதரிகளுக்கு கூறிப் பாது காப்பைப் பெற்றுக்கொள்வது முக்கியமான ஒன்றாகும்.

மகளிர் அபிவிருத்தி நிலையம், யாழ்ப்பாணம்

# பாகிஸ்தானில் மீண்டும் இராணுவ ஆட்சி?

# அதிபர் சர்தாரிக்கு இராணுவத் தளபதி கெடு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் அரசியல் மற்றும் பாதுகாப்பு நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே வருவதால் அரசு நிர்வாகத்தில் இராணுவம் தலையிடும் சூழ் நிலை உருவாகலாம் .மீண்டும் இராணுவ ஆட்சி ஏற்படலாம் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதற்கேற்ற வகையில் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் உடனான பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணும்படி அதிபர் ஆசிப் அலி சர்தாரியை இராணுவத் தளபதி கயானி கேட்டுக் கொண்டுள்ளார்.

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீபும் அவரின் சகோதரரும் தேர்தலில் போட்டியிட உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளது. இதனால் அதிபர் சர்தாரி மீதும் ஆளும் பாகிஸ்தான் மக்கள் கட்சி மீதும் நவாஸ் ஷெரீப் மற்றும் அவரின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சியினர் கோபம் கொண்டுள்ளனர்.

அவர்களின் போராட்டத்தால் பாகிஸ்தானின் அரசியல் சூழ் நிலை குழப்பம் நிறைந்ததாக மாறியுள்ளது. அதே நேரத்தில் பாகிஸ்தானின் பழங்குடி இன பகுதிகளில் அல்- குவைதா மற்றும் தலிபான்களின் ஆதிக்கம் அதிகரித்துள்ளதும் தலிபான்களை ஒடுக்க அமெரிக்கப் படையினர் அவ்வப்





போது பாகிஸ்தான் பகுதியில் தாக்குதல்நடத்தி வருவதும் பயங்கரவாதச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதும் அந் நாட்டின் பாதுகாப்பை கேள்விக் குறியாக்கியுள்ளது.

லாகூரில் இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள் மீது சமீபத்தில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதல் மற்றும் அவர்களைக் கைது செய்ய முடியாமல் பாகிஸ்தான் அரசு திணறி வருவது போன்றவையும் அங்கு நிலைமை மோசமாக உள்ளது என்பதை வெளியுலகிற்கு எடுத்துக் காட்டியுள்ளன.

எதிர்க்கட்சிகள், மற்றும் சிவில் சமூகத்தினருடனான பிரச்சினைகளைத் தீர்ப்பதிலேயே அங்குள்ள அரசு அக்கறை காட்டிவருவதால் பாதுகாப்பு நிலைமை மிகவும் மோசமாகியுள்ளது

இதனால் பாகிஸ்தான் இராணுவம், அரசு நிர்வாகத்தில் தலையிடலாம். மீண்டும் இராணுவ ஆட்சி ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளது என "ஏசியன் டைம்ஸ்" என்ற ஒன்-லைனில் செய்தி வெளியி டப்பட்டுள்ளது. அதிபராக சர்தாரி பதவியேற்றபின் பாகிஸ்தானின் இராணுவத் தலைமைத் தளபதி அஷ்பக் பர்வேஸ் கயானி ,அரசு நிர்வாகத்தில் தலையிடாமல் ஒதுங்கியே இருந்து வருகிறார். ஆனால் தற்போதைய அரசியல் நிலைமை பொறுக்க முடியாததாக மாறி வருவதால் விரைவில் அவர் தலையிடலாம்.

தற்போதையை ஏற்பாட்டில் , அரச நிர்வாகம் சுமுகமாக நடக்க முடியாத சூழ் நிலை உருவாகியுள்ளதால் இராணுவம் தலையிடும் வாய்ப்பு அதிகரித்து வருகிறது என்றும் ஊடகங்கள் சில செய்தி வெளியிட்டுள்ளன. இந்த சூழ்நிலைகளால் ,அரசியல் எதிரிகளை வழிக்குக் கொண்டு வர, அவர்களுக்கு மேலும் பல சலுகைகளை அதிபர் சர்தாரி வழங்கலாம்

அரசு அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளவும் முன்வரலாம் . சர்தாரி இதைச் செய்யாவிட்டால், இராணுவம் தலையிடும் சூழ்நிலை உருவாகும் என்றும் அவை எச்சரித்துள்ளன. மேலும், நவாஸ் ஷெரீபும், அவரின்ஆதரவாளர்களும் வரும் திங்கட்கிழமை மிகப்பெரிய பேரணி ஒன்றை நடத்த திட்டமிட்டுள்ளனர். அதற்குள் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரும் படியும் அதிபர் சர்தாரியை இராணுவத் தளபதி கயானி கேட்டுக் கொண்டுள்ளார் என்றும் கூறப்படுகிறது.

கடந்த 2007 ஆம் ஆண்டு நவம்பர் 28 ஆம்திகதி தான் முஷாரப்பிடம் இருந்து இராணுவத் தலைமைத் தளபதி பொறுப்பை கயானி பெற்றுக் கொண்டார். அது முதல் அமைதி காத்துவருகிறார். இந்நிலையில், தளபதி கயானி சமீபத்தில் வோஷிங்டன் சென்றார். அங்கு அந் நாட்டு உயர் அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தினார். பாகிஸ்தான் திரும்பிய அவர், இந்த வாரத்தில் இருமுறை அதிபர் சர்தாரியைச் சந்தித்துப் பேசியுள்ளார். அப்போது நாட்டின் அரசியல் மற்றும்பாதுகாப்புச் சூழ்நிலை மோசமாகி வருவதால் அவற்றை தடுக்க கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதிபர் சர்தாரியை கேட்டுக் கொண்டதாகத் தெரிகிறது.

அத்துடன் கடந்த வியாழக்கிழமை இராணுவக் கட்டளைத் தளபதிகளின் கூட்டத்தைக் கூட்டிப் பேசிய கயானி, பாகிஸ்தானில் நடக்கும் ஆட்சி குறித்து அமெரி க்கா வெளியிட்ட கவலை குறித்தும் விவாதித்துள்ளார். அதனால் பாகிஸ்தானில்இராணுவஆட்சிஏற்படுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது. (5)

## வானிலிருந்து கடலிலுள்ள இலக்குகளை தாக்கும் புதிய எறிகணை பரிசோதனை

## ஈரானால் வெற்றிகரமாக நிறைவேற்றம்

ஈரானானது 110 கிலோமீற்றர் தூரம் சென்று தாக்கக்கூடிய புதிய எறிகணையொன்றை ஞாயிற்றுக் கிழமை வெற்றிகரமாக பரிசோதித்தாக அநாட்டு செய்தியூடகம் அறிக்கையிட்டுள்ளது.

போர் விமானத்திலிருந்து மேற்படி 500 கிலோ கிராம் எடையுடைய எறிகணை வெற்றிகரமாக ஏவிப் பரிசோதிக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த தன்னியக்க எறிகணையானது கடலிலுள்ள எதிரிகளின் போர்க் கப்பல்களை தாக்கி அழிக்கும் வல்லமை கொண்டதென கூறப்படுகிறது.

இஸ்ரேலிய பிராந்தியத்திலுள்ள அணு சக்தி மையங்களை சென்று தாக்கி அழிக்கக்கூடிய எறி கணைகளை ஈரான் கொண்டுள்ளதாக அந்நாட்டு புரட்சிகர காவல் படையின் தலைவர் மொஹமட் அலி ஜபாரி அறிவித்தமைக்கு ஒரு சில நாட் களிலேயே இந்த எறிகணை பரிசோத னை இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.


2000 கிலோ மீற்றருக்கும் அதிகமான தூரம் சென்று இலக்குகளை தாக்கக் கூடிய எறிகணைகள் ஈரான் வசம் உள்ளதாக மொஹமட் அலி ஜபாரி இதன்போது தெரிவித்திருந்தார். (5)

உலக தரிசனம்

## விண்வெளியில் சர்வதேச ஆய்வு நிலையம்; டிஸ்கவரி விண்கலம் நாளை பயணம்

(புளோரிடா)

அமெரிக்க டிஸ்கவரி விண்கலம் ஏழு பேருடன் விண்ணில் செலுத்



தப்படுகிறது.

அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளின் ஒத்துழைப்புடன் விண்வெளியில், சர்வதேச விண்நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. ஆய்வகம், கழிப்பறை உள்ளிட்ட வசதிகளைக் கொண்ட இந்த விண்வெளி ஆய்வு நிலையத்துக்கு முழுமின் வசதி அளிக்கும் பொரு ட்டு சூரிய ஒளி தகடு பொருத்தப்படவுள்ளது.

இதற்காக நாளை புளோரிடாவில் உள்ள கெனடி விண்வெளி ஆராய்ச்சி மையத்திலிருந்து டிஸ்கவரி விண்கலம் விண்ணில் செலுத்தப்படவுள்ளது.

வானிலையும் சாதகமாக உள்ளதால் விண்கலம் தடங்கலின்றி விண்ணில் செலுத்தப்படும் என விண்வெளிமைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த விண்கலத்தில் அர்ச்சம் போல்ட், டோமினிக் அண் டோனி, ஜப்பானிய விண்வெளி வீரர் கோய் ச்சி வாகடா , ஸ்டீகன் ஸ்வோன்சன், ரிச்சர்ட் அர்னால்ட், ஜோசப் அகபா, ஜோன் பிலிப்ஸ் ஆகியோர் செல்கின்றனர். (5)

## லாகூர் இலங்கை அணி மீது தாக்குதலுக்கு காரணமான பயங்கரவாதி தப்பி ஓட்டம்

(லாகூர்)

லாகூரில் இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள் மீது நடந்த தாக்குதலுக்கு முகமது அகில் என்ற பயங்கரவாதியே காரணம் என தெரிய வந்துள்ளது. இருந்தாலும், பொலிஸ் பிடியில் இருந்து அவன் தப்பி விட்டான்.

பாகிஸ்தானின் லாகூர் நகரில், கடந்த வாரம் இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலுக்கு காரணமான நபர்களை பொலிஸார் தேடி வந்தனர். இந் நிலையில் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த முகமது அகில் என்பவனே காரணம் என தெரிய வந்துள்ளது.

அவனை பிடிக்க லாகூர் நகரில் பொலிஸார் அதிரடி வேட்டை நடத்தினர். இருந்தாலும் அவன் தப்பி ஓடி விட்டான். அவனின் கூட்டாளியான தலத் என்பவன் கைது செய்யப்பட்டுள்ளான். தப்பி ஓடிய பயங்கரவாதி முகமது அகில், காகுதா என்ற பகுதியைச் சேர்ந்தவன். இருப்பினும், அவன் எந்த அமைப்பைச் சேர்ந்தவன் என்ற விபரம் வெளியிடப்படவில்லை.

லாகூரில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்திய லிபர்டி என்ற இடத்தருகே உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் தான், அகிலும், தலத்தும் தங்கி இருந்துள்ளனர். தலத்து தான் பயங்கரவாதிகளுக்கு ''சிம்கார்ட் வாங்கிக் கொடுத்துள்ளான். அகில் தான் தாக்குதலுக்கு மூல காரணம் என்றும், அதை நிறைவேற்றும் பொறுப்பை அவன் தான் ஏற்றிருந்தான் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.


லாகூர் தாக்குதல் தொடர்பாக பாகிஸ்தான் பொலிஸார் இதுவரை 100 இற்கும் மேற்பட்டவர்களை பிடித்து வைத்துள்ளனர். இருந்தாலும் தாக்குதல் நடத்திய 12 பயங்கரவாதிகளில் யாரையும் கைது செய்யவில்லை.

கைதான 100 பேரில் ஐந்து பேர் தாக்குதல் நடத்திய பயங்கர வாதிகளுக்கு உதவியவர்கள். பயங் கர வாதிகள் விட்டுச் சென்ற மொபைல் மூலம் இந்த விபரம் தெரிய வந்துள்ளது.

தடை செய்யப்பட்ட லஷ்கர் இ-தொய்பா அமைப்பின் ஒரு பிரிவைச் சேர்ந்தவர்களே இத்தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்றும் மும்பை தாக்குதல் தொடர்பாக ஜாகீர் ரகுமான் லக்வி என்பவன் கைது செய்யப்பட்டதற்கு பதிலடியாக இதைச் செய்திருக்கலாம் என்றும் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.. (5)

## ஒபாமாவுடன் மன்மோகன் அடுத்த மாதம் சந்திப்பு


(புதுடில்லி)



இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அடுத்த மாதம் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை சந்தித்துப் பேசவுள்ளார். ஏப்ரல் 2ஆம் திகதி இந்த சந்திப்பு லண்டனில் ஜி-8 நாடுகளின் மாநாட்டின் போது நடைபெறும்.

சர்வதேச பொருளாதார நெருக்கடி குறித்து ஆலோசிக்க ஜி-8நாடுகளின் மாநாட்டிற்கு சிறப்பு அழைப்பாளராக வரும்படி இங்கிலாந்து பிரதமர் கோர்டன் பிறவுன் விடுத்த அழைப்பை மன் மோ கன் சிங் ஏற்றுக் கொண்டார்.

ஏப்ரல் முதலாம் திகதி மன்மோகன் சிங்டில் லியி லிரு ந்து லண்டன் புறப்பட்டுச்செல்கிறார். இதை பிரதமர் அலுவலக வட்டாரத் தகவல்கள் தெரி வித்தன.



லண்டனில் மன்மோகன் சிங் மற்றும் ஒபாமா சந்திப்பு குறித்து ஏற் பாடுகளை தற்போது வெளியுறவுத் துறை செய்து வருகிறது.

வெளியுறவுத் துறைச் செயலாளர் சிவ்சங்கர் மேனன் ஏற்கனவே இது தொடர்பாக அமெரிக்கப் பயணம் மேற்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

தேனைத் தொடுகிறவனுக்கு விரல்களை நக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

-அரேபியா

வலம்புரி

## தமிழ் மக்களை வியக்க வைத்த ஜெயலலிதாவின் உரை

சுயநிர்ணய அதிகாரமுள்ள 'தமிழ்த்தனி நாடு' இலங்கையில் அமைக்கப்பட வேண்டுமென அ.தி.மு.கவின் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா கூறியுள்ளார்.

ஈழத்தமிழர்களுக்காக நேற்று முன்தினம் அவர் உண்ணாவிரதம் இருந்தார்.

எவரும் எதிர்பார்க்காத வகையில் செல்வி ஜெயலலிதாவின் உரையும், உண்ணாவிரதமும் அமைந்திருந்தது.

ஈழத்தமிழர்களுக்கு விரோதமான போக்குடையவர் ஜெயலலிதா என்பதே பொதுவான முடிவு. அந்த முடிவு சுயமாக எடுக்கப்பட்டதல்ல.

மாறாக அவ்வப்போது ஜெயலலிதா விடுகின்ற அறிக்கையும், உரைகளுமே அத்தகையதொரு முடிபை எடுப்பதற்கு வழிவகுத்தன.

இவை தவிர ஈழத்தமிழர்களுக்கு -விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசுகின்றவர்களைச் சிறையில் அடைத்து தமிழகத்தில் இருக்கக் கூடிய ஈழத்தமிழர் ஆதரவை அடக்கும் முயற்சியிலும் அவர் ஈடுபட்டார்.

அவரின் இந்த மோசமான முடிவுக்கு மத்திய அமைச்சராக இருந்த வை.கோபாலசாமியும் தப்பவில்லை.

பொடா தடைச் சட்டத்தின் கீழ் வை.கோபாலசாமி, பழ.நெடுமாறன் போன்றவர்கள் சிறைவாசம் செல்லவேண்டியதாயிற்று.

நிலைமை இவ்வாறாக இருந்தபோது நேற்று முன்தினம் செல்வி ஜெயலலிதா ஈழத்தமிழருக்கு ஆதரவாக உண்ணாவிரதப் போரை நடத்தியதுடன், ஈழத்தமிழரின் பிரச்சினைக்கான ஒரே தீர்வு 'சுயநிர்ணய அதிகாரமுள்ள தமிழ்த் தனி நாடு' என்றும் கூறி தமிழக மக்களையும், ஈழத் தமிழர்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளார்.

ஜெயலலிதாவின் இந்த உரை அதிர்ச்சிக்குரியது எனக் கூறுவதற்கு வேறு பல காரணங்களும் உண்டு.

அதாவது ஈழத்தமிழரை ஜென்ம சத்துருவாக கருதும் சுப்பிரமணிய சுவாமி, ஜெயலலிதாவின் வலதுகரமாக இருக்கிறார்.

ஜெயலலிதாவின் துணையும் இருப்பதால் தான் எதற்கெடுத்தாலும் சுப்பிரமணிய சுவாமி ஈழத்தமிழரைத் தாக்குவதை தனது நித்திய தொழிலாகக் கொண்டுள்ளார்.

நிலைமை இவ்வாறாக இருக்கும் போது ஜெயலலிதா நேற்று முன்தினம் ஆற்றிய உரை ஜெயா - சாமி உறவுக்குப் பெரும் பங்கமாக அமைந்துள்ளது எனலாம்.

எதுவாயினும் கலைஞர் கருணாநிதி தான் பேசுவதில் பத்து வீதத்தைச் செய்து முடிப்பார்.

செல்வி ஜெயலலிதாவோ பேசுவதில் தொண்ணூறு வீதத்தை நிறைவேற்றுவார்.

இந்த அடிப்படையிலும், ஈழத்தமிழினத்தின் துன்பம் கண்டு துடிக்கின்ற வை.கோபாலசாமி, ஜெயலலிதாவுடன் கூட்டணி வைத்திருப்பதன் அடிப்படையிலும் அவர் ஆற்றிய உரை அதிர்ச்சியாக இருப்பினும், முக்கியத்துவமானதென்பதில் இருவேறு கருத்திற்கிடமில்லை.

இவை யாவற்றுக்கும் மேலாக, 'தமிழீழம்' கிடைக்குமெனில் எனது பதவியையும் துறக்கத் தயார் எனக் கூறிய தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியின் உரையுடன் ஜெயலலிதாவின் உரையும் இணைந்து கொள்வது போல் இருவரும் ஒன்றுபட்டால் எல்லாமே நல்லதாக நடக்கும்.

# அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வருவோர் சொந்த இடத்தில் குடியமர்த்தப்படுவர்

## அரசாங்கம் தெரிவிப்பு

வன்னியிலிருந்து பாதுகாப்புப் பகுதிக்கு வரும் மக்கள் விரைவில் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்படுவார்கள் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

வடக்கை முழுமையாகக் கைப்பற்றியவு டன் அரசியல் தீர்வு ஒன்றை முன்வைப்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்கின்றது.

இது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவ தற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்துள்ளோம் என்று வெளி விவகார அமைச்சர் றோகித போகொல்லாகம தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் சில தமிழ்க் கட்சிகளுடன் ஏற்கனவே பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றோம். அரசியல் தீர்வு விடயத்தில் சர்வதேச சமூகமும் எமக்கு ஒத்துழைப்பு வழங்கும் என்றும் அமைச்சர் கூறினார்.

நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலை மற்றும் தெற்கு, மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் ரிச்சர்ட் பௌச்சருடனான உரையாடல் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்விடயம் தொடர்பில் அமைச்சர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் தெரிவித்ததாவது,

சிவில் மக்களின் பாதுகாப்புக்காக அர சாங்கம் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. மக்கள் அரச கட்டுப் பாட்டுப் பகுதிகளுக்கு வருவதற்காக புதிதாக இரண்டு பாதுகாப்புப் பாதைகளை அறிவித்துள்ளோம்.

பாதுகாப்புப் பிரதேசங்களுக்கு வருகின்ற மக்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அம் மக்களை விரைவில் அவர்களின் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

இவை தொடர்பாக நான் ரிச்சர்ட் பௌச்சருக்கு விளக்கிக் கூறினேன். நாம் சர்வதேச சமூகத்திற்கு எமது நிலைப்பாட்டை அறிவித்து வருகின்றோம்.

எமது நிலைப்பாட்டை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டு வருகின்றது. வடக்கு மீட்கப்பட்டவுடன் அரசியல் தீர்வை முன்வைக்க அரசாங்கம் தயாராக இருக்கின்றது.

அது தொடர்பில் நாங்கள் சில தமிழ்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின் றோம். விரைவில் தமிழ்த்தேசியக் கூட்டமைப் புடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்துவார்.

கூட்டமைப்பு தமிழ் மக்களின் நலன் கருதி அரசியல் தீர்வை முன்வைக்க எமக்கு ஒத் துழைப்பு வழங்கும் என எதிர்பார்க்கின்றோம். அத்துடன் இவ்விடயத்தில் சர்வதேச சமூ கம் எமக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கும் என்றார். (ச-5)

# இலங்கைக்கு உதவிசெய்தால் யப்பானை தமிழ்மக்கள் புறக்கணிப்பர்

## யப்பான் தூதுவரிடம் எடுத்துரைப்பு

(சென்னை)

இலங்கைக்கு யப்பான் அளித்து வரும் உதவிகளை நிறுத்தாவிட்டால் உலகம் முழுவதும் வாழும் 10 கோடி தமிழர்கள் யப்பான் நாட்டின் பொருட்களை புறக்கணிப்பர் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் மருத்துவர் இராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட யப்பான் அரசு உதவி செய்ய வேண்டும் என்று சென்னையில் உள்ள யப்பான் துணைத் தூதுவரிடம் இலங்கை தமிழர்கள் பாதுகாப்பு இயக்கத்தினர் நேரில் கோரிக்கை மனு அளித்தனர்.

இலங்கையில் உடனடியாக போர் நிறுத்தம் ஏற்படவும், இந்தியா அளித்து வரும் இராணுவ உதவி உள்ளிட்ட அனைத்து விதமான உதவிகளையும் நிறுத்த வலியுறுத்தியும் இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கத்தினர் பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்த பிரச்சினையில் உலக நாடுகள் தலையிட்டு நடவடிக்கை எடுக்கும் வகையில் சென்னையில் உள்ள அமெரிக்க தூதுவர், பிரித்தானியா துணைத் தூதுவர் ஆகியோரையும் நேரில் சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர்.

அவர்கள் இலங்கை தமிழர் பிரச்சினை குறித்து யப்பான் துணைத் தூதுவரிடம் 30 நிமிடத்துக்கும் மேலாக விவாதித்தனர்.

இதில் மருத்துவர் இராமதாஸ் மேலும் கூறியதாவது; இலங்கைக்கு யப்பான் அதிக நிதியுதவி செய்து வருகிறது. அந்த நிதியைக் கொண்டு பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளில் இருந்து ஆயுதங்களை வாங்கி தமிழர்களை படுகொலை செய்து வருகிறது. இலங்கையில் பிரச்சினைக்கு தீர்வு ஏற்பட யப்பான் ஆர்வமாக உள்ளது.

போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும் என்ற 10 கோடி தமிழர்களின் வேண்டுகோளை யப்பான் துணைத் தூதுவரிடம் தெரிவித்தோம். தமிழர் கலாசாரம், தமிழர் பண்பாடு, தமிழர் வரலாறு குறித்து அவர் நன்கு தெரிந்து வைத்திருக்கின்றார்.

இலங்கைக்கு யப்பான் அளித்து வரும் உதவிகளை நிறுத்தாவிட்டால் உலகம் முழுவதும் வாழும் 10 கோடி தமிழர்கள் யப்பான் நாட்டின் ஆட்டோ மொபைல் மற்றும் எலெக்ட்ரானிக்ஸ் பொருட்களை புறக்கணிக்கும் ஒரு கருத்தையும் அதனால் யப்பானுக்கு ஏற்படும் வர்த்தக இழப்புக்களை புள்ளி விபரங்களுடன் விளக்கினோம் என்றார். (ச-5)

## ரி.எம்.வி.பியின் அலுவலகங்கள் சி.சு.கவாக நேற்று மாறியது

களுவாஞ்சிக் குடியிலுள்ள பட்டிருப்பு கோட்ட ரி.எம்.வி.பி. தலைமை அலுவலகம் உட்பட அனைத்து அலுவலங்களும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் உத்தியோக பூர்வ அலுவலகங்களாக மாற்றப்பட்டுள்ளன. களுவஞ்சிக்குடி செட்டிப்பளையம், கல்லாறு, பழுகாமம், கொக்கட்டிச் சோலை அனைத்து அலுவலகங்களும் நேற்றுக் காலை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உத்தியோக பூர்வ அலுவலகங்களாக மாற்றப்பட்டன.

களுவாஞ்சிக்குடி தலைமைக் காரியாலயத்தில் உத்தியோக பூர்வ நிகழ்வு நடைபெற்றது, நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி முரளிதரன் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையைப் பெற்று தேசிய ஒருமைப்பாடு மற்றும் ஐக்கியத்துவ அமைச்சராக பதவியேற்றதை அடுத்து நேற்று இந்த நிகழ்வு நடைபெற்றது. ரி.எம்.வி.பி. கட்சியின் சார்பில் பிரதேச சபைத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டி மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் தவிசாளராக உள்ள சீனித்தம்பி பாக்கியராசா நேற்று களுவாஞ் சிக்குடி அலுவலகத்தில் வைத்து தாம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்ததாக அறிவித்தார். (ச-3)

## விண்ணப்பம் கோரல்

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை பிரதீப் விளையாட்டுக் கழகம் நடாத்தும் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலய சிரேஷ்ட மாணவ தலைவன் அமரர் கணபதிப்பிள்ளை பிரதீபன் ஞாபகார்த்தமாக கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்களை எதிர் வரும் 15 ஆம் திகதிக்கு முன்பாக பதிவு செய்து கொள்ளுமாறு விளையாட்டுக்கழக நிர்வாகத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இக் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி ஆண்டு தோறும் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (ச)

## சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

# சுதந்திரனாக இரு



முதலில் சுதந்திரராக இருங்கள் .பின்னர் எத்தனை தனித்து வங்களை வேண்டுமானாலும் உங்கள் விருப்பம் போல் வைத்துக் கொள்ளுங்கள். பின்னர் நாம் மேடையில் தோன்றி பிச்சைக்காரன் வேடத்தில் நடிக்கும் நடிகனைப்போல் நடிப்போம் நடிப்புப் பிச்சைக் காரனையும் உண்மையிலேயே தெருவில் பிச்சையெடுக்கும் பிச்சைக்காரனையும் ஒப்பிட்டு வேறுபாடுகளைக் காணுங்கள் ஒரு வேளை இருவரும் பார்வைக்கு ஒன்று போல் தான் இருப்பார்கள். பேச்சுவார்த்தைகளும் ஒன்றுபோலவே உள்ளன. ஆனாலும் எத்தனை வேறுபாடு!

ஒருவன் பிச்சை எடுப்பதன் மூலம் ஆனந்தத்தை அனுபவிக்கிறான் ,மற்றொருவன் துன்பமும் துயரமும் அடைகிறான். எது இந்த வேறுபாட்டை ஏற்படுத்துகிறது?ஒருவன் சுதந்திரன் ,மற்றவன் கட்டுண்டவன். தன் வறுமை உண்மையல்ல ,தான் நாடகத்திற்காக தரித்துள்ள வேடம் அது என்பதை நடிகன் உணர்த்திருக்கிறான். உண்மை பிச்சைக்காரனோ தான் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் பிச்சை எடுப்பதே தனது நிலை ,தான் பிச்சை எடுத்தே தீர வேண்டும் என்று எண்ணுகிறான். இதுதான் நியதி.

நமது உண்மை இயல்பை அறியாததுவரை இயற்கைச் சக்திகள் ஒவ்வொன்றாலும் முன்னும் பின்னும் அலைக்கழிக்கப்பட்டு இயற்கையில் உள்ள எல்லாவற்றிற்கும் அடிமைகளாக இருக்கும் பிச்சைக்காரர்களே நாம். உதவி வேண்டி நாம் உலகம் முழுவதும் கதறுகிறோம் ,உதவி கிடைப்பதில்லை. கற்பனைக்கடவுள்களை நோக்கி அழுகிறோம், உதவி கிட்டுவதில்லை. ஆனாலும் உதவி வரும் என்று நம்பிக்கையுடன் இருக்கிறோம். இப்படி கதறி அழுவதும் நம்பிக் காத்திருப்பதுமாக ஒரு வாழ்க்கை முழுவதும் வீணாகிறது. இதே நாடகம் தொடர்ந்து நடைபெறுகிறது.

# ஆசிரியர்களின் விடுமுறை பற்றிய தகவல்கள்

(கொழும்பு)

குணாம்சமான கல்விக்கு மட்டுமல்ல, சகல மனித, பௌதீக வள அபிவிருத்திக்கான விடயங்களுக்கும், பாடசாலைகளில் இருந்தே வழி காட்டல்கள் ஆரம்பிக்க வேண்டும் என்ற கருத்தில் அபிப்பிராய பேதங்கள் இருக்காது என எண்ணத் தோன்றுகின்றது.

உயிர்களை முகாமைப்படுத்தும் இடமாக பாடசாலை இருப்பதால், முகாமையாளர் கள்ளான அதிபர்கள், சட்டத்தோடு மட்டும் இதைக் கொண்டு நடத்த முடியாதுள்ளது. அத்தோடு நியதிச் சட்டங்களை மீறி ஆளணிகளைக் கைக்குள் வைத்திருக்கவும் முடியாதுள்ளது.

கணக்காய்வு உத்தி யோகத்தர்கள் உட்பட மேலதிகாரிகள் நிதிப்பிரமாணங்களில் மட்டுமே கவனமாக இருப்பதால் இதுவும் பூரணமாக சாத்தியப்படாது.

ஆசிரியர்களுக்கு உள்ள உரிமைகளையும், சலுகைகளையும் அறியும் போது ஆசிரியர்கள் மகிழ்ச்சியடைகின்றார்கள். இவைகளைப் பெற்றுக்கொள்ளவும் சட்டங்களையும், விதிமுறைகளையும் அறியத் தரும் போது அம்மகிழ்ச்சி தொடருவதாக இல்லை.

இது இயல்பானதே. நிருவாகிகள் பக்கம் சாருவதாக குற்றம் சாட்டுக்கூட முன் வைக்கப் படுகின்றன. எவ்வளவு ஆளுமை மிக்க திறமை யான திட்டமுள்ள அதிபராக இருந்தாலும் காலையில் சில ஆசிரியர்கள் பாட சாலைக்கு வராவிட்டால் அவரது முழுத் திட்டமும் கேள்விக் குறியாகிவிடும்.

மேலதிக ஆசிரியர்கள் இருக்கும் பாடசாலைகளில் மாற்று ஏற்பாடுகள் இருக்கும். ஆனால், பெரும்பாலான தமிழ் மொழி மூலப் பாடசா லைகளில் ஆசிரியர் தட்டுப்பாடு நிலவுவதால் ஆசிரியர் லீவு பாடசாலை திட்டமிடுதலுக்கு சவாலாக இருந்து வருகின்றது.

கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள 2003/38 இலக்கம் கொண்ட ஒரு பாடசாலையின் ஆசிரியர் தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கில் ஆசிரியர்களின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல் என்ற சுற்றறிக்கையில் ஆசிரியர்களின் கற்பித்தல் நேரம் தொடர்பாக பின்வரும் விதி உண்டு.

பாடக் கற்பித்தலில் ஈடுபடுகின்ற ஆசிரியர்கள் வாரம் ஒன்றுக்கு பொதுவான 40 நிமி டங்களைக் கொண்ட 35 பாடவேளைகளும், பாடக் கற்பித்தலுக்கு புறம்பாக, வகுப்புகளுக்குப் பொறுப்பாகவுள்ள ஒரு ஆசிரியர் அவ்வாறு வகுப்புக்குப் பொறுப்பாக இருக்கும் காலங்களில் 33 பாட வேளைகளும் கற்பித்தல் வேலைகளில் ஈடுபட வேண்டும்.

உயர்தரப் பரீட்சை பாடங்களை கற்பிப்பதற்காக இயன்ற சகல சந்தர்ப்பங்களிலும், பட்டதாரிகளையே ஈடுபடுத்தல் வேண்டும். அவர்கள் ஒரு வாரத்திற்கு குறைந்த பட்சம் 30 பாட வேளைகளாவது கற்பிக்க வேண்டும்.

இது குறைந்த பட்ச கற்பித்தல் நேரமாகும். 42 பாடங்களை ஓய்வில்லாமல் கற்பிக்கும். ஒரு பாட நேரத்தில் இரண்டு, மூன்று வகுப் புகளுக்கு கற்பிக்கும் ஆயிரக் கணக்கான ஆசிரியர்கள் எமது பாட சாலைகளில் சேவையாற்றி வருவதை இங்கு குறிப்பிட வேண்டும்.

சராசரியாக ஒரு ஆசிரியர் ஒரு நாளைக்கு ஆறு பாட வேளைகளில் குறைந்த பட்சம் கற்பித்தலில் ஈடுபடுகின்றார்.

45 பிள்ளைகள் கொண்ட வகுப்புக்கு பொறுப்பாக இருக்கும் அவர் ஒரு நாள் வகுப்புக்கு வரா விட்டால் 45 X 40X 6 = 10, 3800 நிமிடங்கள் அல்லது 180 மனித மணித்தியாலங்கள் வேறு ஏற்பாடு இல்லாவிட்டால் பலன் இழந்து போகும்.

இது ஒரு சிறு கணக்கீடு மட்டுமே. ஆசிரியர்களும் மனிதர்களே. அவர்களுக்கும் மற்றைய அரசாங்க சேவையாளர்களைப் போல சகல தேவைகளும் உண்டு, சுகவீனங்கள் உண்டு, குடும்பங்கள் உண்டு. ஆகவே தேவைக்காக லீவு எடுக்கும் ஆசிரியர்களை யாரும் குறை சொல்ல முடியாது.

ஆசிரியர்கள் அல்லாத அரசாங்க சேவை யாளர்கள் லீவு எடுப்பது பற்றி யாரும் அலட்டிக் கொள்வதும் இல்லை. இவற்றை முன்னுரையாகக் குறிப்பிட்டு ஆசிரியர் லீவு பற்றிய இந்தத் தகவல்களை எழுத வேண்டியுள்ளது.

ஆசிரியர்களின் விடுமுறை தொடர்பாக தாபனக் கோவையில் தனி

**ஆசான்**

யான பிரிவு ஒன்று உண்டு. 50களில் வெளியிடப்பட்ட கல்வி அறிவுறுத்தல் 1,2 ஆகிய சட்டக் கோவையிலும் பல விடயங்கள் சொல்லப்பட்டுள்ளன.

புதிது புதிதாக பல சுற்றறிக்கைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஆனாலும் பாட சாலைகளில் லீவு தொடர்பான விடயங்கள் பற்றிய தெளிவின்மை காணப்படுகின்றது. ஆசிரியர்களுக்கு விடுமுறை ஓர் உரிமையன்று, ஆதலால் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் ஒரு சலுகையாகவே கருதப்படுகின்றது. (தொடரும்)

## யுத்தப் பிரதேசங்களில் செய்தி சேகரிக்க ஊடகங்களுக்கு அனுமதியளிக்க வேண்டும்

### அனைத்துலக மன்னிப்புச் சபை கோரிக்கை

யுத்தம் இடம்பெற்றும் பிரதேசங்களில் சுதந்திரமான முறையில் செய்திகளை சேகரிக்க ஊடகங்களுக்கு பூரண அனுமதி அளிக்கப்பட வேண்டுமென இலங்கை அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் அனைத்துலக மன்னிப்புச் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

தற்போதைய கள நிலவரங்கள் பற்றிய உண்மைத் தன்மைகளை அறிந்து கொள்வதில் சிக்கல்கள் காணப்படுவதாக அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

யுத்த நிலைமைகள் குறித்து அறிந்து கொள்வதும் தகவல்களையும் வெளியிடுவதும் ஜனநாயகத்தின் முக்கிய பண்புகள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


மேலும் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீது மறைமுகமாக கட்டவிழ்த்து விடப்படும் சகல அடக்கு முறைகளும் கண்டிக்கப்பட வேண்டியதென அனைத்துலக மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது. (6).

## இந்திய வைத்தியக் குழுவினருடன் றோ உளவுப்பிரிவும் ஊடுருவலாம்

### விமல் வீரவன்ச சந்தேகம்

(கொழும்பு)

இடம்பெயர் மக்களுக்கு சிகிச்சையளிக்கும் பொருட்டு இலங்கைக்கு வருகை தரும் இந்திய வைத்திய குழாமுடன் றோ உளவுப் பிரிவினரும் ஊடுருவக் கூடிய அபாயம் காணப்படுவதாக



தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பத்தர முல்லவில் அமைந்துள்ள கட்சித் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இறுதி மூச்சுக்காகப் போராடி வரும் தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகளுக்கு ஆதரவளிக்க பல்வேறு சர்வதேச சக்திகள் முயற்சி மேற் கொண்டு வருவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பொதுமக்களை மீட்கும் பணியில் ஈடுபட வுள்ளதாக தெரிவித்துள்ள அமெரிக்க கடற் படையினரையும் இலங்கைக்குள் பிரவேசிக்க அனுமதிக்கக் கூடாதென விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். (6)

## வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### பெருநெல்லி

Botanical Name - Phallanthus emblica
Family - Euphorbiacea
Engl - Emblic myrobalan
Sing - Ambula / Nelli

இம்மரம் சிறிய, பெரிய கிளைகளுடன் சுமார் 10 மீற்றர் உயரம் வரைக்கும் சிறிது அடர்த்தியாக வளரும். 6 முதல் 12 அங்குலம் நீளமுள்ள சிறிய இலைக்காம்புகள் மாறி மாறி அமைந்திருக்கும். சில கணுக்களில் 2 காம்புகள் இணைந்திருப்பதுண்டு. இந்தக் காம்புகளில் சுமார் 80 முதல் 160 வரைக்கும் சிறிய, பெரிய நெல்லில் உருவத்திற்கு ஒத்த இலைகள் மாறி, மாறி அமைந்துள்ளன. இலைகள் நல்ல அழுத்தமும், தடித்தும், சுணைகளற்றும், வெளுத்த பச்சை நிறத்துடனும், காண முடியாத சிறு காம்புடனும் காணப்படுகின்றன.

மலர்கள் ஒரு பாலின ; ஆண்மலர்கள் மெல்லிய காம்பிலும் பெண் மலர்கள் குட்டை காம்பிலும் இணைக்கப்பட்டுள்ளன ; கனி அமுங்கிய கோளவடிவினது ; சதைப்பற்றானது ; மஞ்சள் அல்லது கருஞ் சிவப்பு ; 6 பிரிவு கோடுகள் கொண்டது ; விதைகள் மூன்று வரிப்பள்ளங்கள் உடையவை.

**பரம்பலும், இனவிருத்தியும்.**

மரத்திலிருந்து தானாக விழுந்த பழத்தின் விதைகளை போட்டு பயிராக்க வேண்டும். யாழ். மாவட்டத்தில் பொதுவாக பரம்பல் காணப்பட்ட போதிலும் வீட்டுத் தோட்டங்களிலும், சில தோப்புகளிலும் பயிரிட்டு வளர்க்கின்றனர்.

இதைவிட ஒட்டு மூலமும் இனப்பெருக்கம் செய்யப்படுகின்றது. ஆடி மாதங்களில் 9 மீற்றர் X 9 மீற்றர் இடைவெளியில் நடப்படுகின்றது.

இது பங்குனி - வைகாசி மாதங்களில் பூத்து காத்திகை - மாசி மாதங்களில் காய்களைத் தரும். ஓராண்டில் ஒரு மாதத்திலிருந்து 150 - 200 கிலோ காய்களை அறுவடை செய்யலாம்.

**100 கிராம் நெல்லிக்காயிலுள்ள சத்துக்கள்**

புரதம் 0.5 கிராம், கொழுப்பு 0.1 கிராம், காபோவைதரேற்று 13.7 கிராம், கல்சியம் 50 மி.கிராம், பொஸ்பரஸ் 20 மி.கி, இரும்பு 1.2 மி.கி, கரோட்டின்9.0 மை. கிராம், தயமின் 3.0 மை. கிராம், விற்றமின் 'C' 600. மி.கி. நார் 3.4 கிராம்.

**மருத்துவப் பயன்கள்**

✦ நெல்லிக்கனி பித்தத்தினால் உடலில் உண்டாகின்ற பல கோளாறுகளை அகற்றி குணமாக்குகின்றது. குறிப்பாக இது பித்தத்தினால் உண்டாகும் வாந்தி, மயக்கத்தை குணப்படுத்தும். இரத்த சுத்திக்கும் இரத்த விருத்திக்கும் இது துணை புரிகிறது.



✦ நெல்லிக்காய், ஊறுகாய் இனை தொடர்ந்து உண்டு வந்தால் 'மிகு அமிலச் சுரப்பு' நீங்கி இரைப்பையில் வேலை சீர்படும்.

✦ நெல்லிக்காயை அரைத்து நெற்றியில் பற்றுப் போட்டால் சளியுடன் கூடிய தலைவலி, தலைப்பாரம் ஆகியவை குணமாகும். கண்ணுக்கு குளிர்ச்சியை உண்டாக்கும்.

✦ ஓர் இரவு முழுவதும் ஊற வைத்து கசக்கி பிழிந்து வடிகட்டிய நெல்லிக்காய்ச் சாறை தேனுடன் கலந்து அருந்த மலச்சிக்கல் நீங்கும்.

✦ காலை வேளைகளில் உணவு அருந்துவதற்கு முன்பு தினந்தோறும் நெல்லிக்கனி சாற்றை அருந்தி வந்தால் நாட்பட்ட சீதபேதி. நீரிழிவு குணமாகும்.

✦ நெல்லிக்காய்ச்சாறும். எலுமிச்சம் பழச்சாறும் சமஅளவு கலந்து இரண்டு அல்லது மூன்று முறை அருந்த குடற் புழுக்களை அகற்றும்.

✦ நெல்லிக்காயை துவையல் செய்து சாப்பிட சுவையின்மை வாந்தி தீரும்.

✦ நெல்லிக்கனி, உலர்ந்த திராட்சை ஆகியவற்றை ஓர் இரவு நேரம் ஊறவைத்து கசக்கிப் பிழிந்து கிடைக்கும் நீரையும் சமஅளவு கலந்து அருந்தினால் சிறுநீர் கோளாறுகள் தீரும்.

✦ நெல்லிக்காய் ஆண்டு முழுவதும் கிடைப்பதில்லை. எனவே கிடைக்கும்போது சேகரித்து அதனை ஊறுகாய் செய்து பக்குவப்படுத்தி சேமித்து வைத்து உணவுடன் சேர்த்து கொஞ்சமாக சாப்பிட்டு வர உடல் இறுகி பலம் பெறும். உடற்சூடு தணியும். உற்சாகம் பிறக்கும்.

✦ நெல்லிக்காயை உலரவைத்து இடித்துப், பொடித்து சர்க்கரையும், தேனும், நெய்யும் கலந்துண்ண பித்த சம்பந்தமான நோய்கள் தீரும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்டவிரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி

✦ நெல்லிக்காயை இடித்துப் பிழிந்த சாறு 15 மில்லி ஒரு தேக்கரண்டி தேன், இரண்டு தேக்கரண்டி எலுமிச்சம்பழச்சாறு ஆகிய வற்றை கலக்கி காலை உணவுக்கு முன் அருந்தி வர நீரிழிவு நோய் குணமாகும். புத்தம் புதிய நெல்லிக்கனி கிடைக்காத வேளையில் இதற்கு உலர்ந்த நெல்லிக்காயை பொடித்து தண்ணீரில் போட்டு சுண்டைக்காய்ச்சி மேற் கூறிய முறையில் சேர்க்கலாம். (தொடரும்)

## கிளிநொச்சி மற்றும் முல்லை மாணவர்களுக்கு மீள்பரீட்சைகள்

### பரீட்சை திணைக்களம் தீர்மானம்

(கொழும்பு)

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த கல்வி பொது தராதர சாதாரண மாணவர்களுக்கு விசேட பரீட்சையினை நடாத்த பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

நடைபெற்று முடிந்த கல்வி பொது சாதாரண தர கணிதபாட வினாத்தாளில் ஏற்பட்ட சிக்கல்களினால் அந்த பரீட்சை மீள நடத்தப்பட்டது.

எனினும் இந்த மீள் பரீட்சைகளின் போது கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து தோற்றாத மாணவர்களுக்காகவே இந்த விசேட பரீட்சைகள் நடத்தப்படவுள்ளன.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து சுமார் 6 ஆயிரத்து 500 பரீட்சார்த்திகள் இந்த பரீட்சைக்கு தோற்றவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்டங்களிலிருந்து 7 ஆயிரத்து 200 பேர் இந்த பரீட்சைக்கு விண்ணப்பித்திருந்த போதும் 700 பேர் மாத்திரமே. இந்த பரீட்சைக்கு தோற்றியதாக பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (6)

# நான் தான் நம்பர்-1 நிரூபித்தது அவுஸ்திரேலியா



(டேர்பன்)

இரண்டாவது டெஸ்டில் அவுஸ்திரேலிய அணி 175 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்க அணியை வீழ்த்தி தொடரை 2:0 என்ற கணக்கில் தனதாக்கியதுடன் ஐ.சி.சி. டெஸ்ட் சிறந்த அணிகள் தரவரிசையில் நம்பர்-1 அணி என்ற கிரீடத்தை தன் வசப்படுத்தியது.

இதன் மூலம் தனது சொந்த மண்ணில் இழந்த கௌரவத்தையும் அவுஸ்திரேலிய அணி மீட்டது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 3 டெஸ்ட்,5 ஒரு நாள் மற்றும் 2இருபது-20 போட்டிகளில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்டில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்று தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலிருந்த நிலையில் இரண்டாவது டெஸ்ட் கடந்த 6ஆம் திகதி டேர்பனில் ஆரம்ப மானது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் 352 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக் களையுமிழந்தது.

இதில் ஹயூக்ஸ் 115, ஹட்ரிச்115 ஓட்டங்களையும் மைக்கெல் ஹசி 50 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஸ்ரையன் 3 விக்கெட்டுக்களையும் நிற்னி, கலிஸ் மற்றும் ஹரிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் மற்றும் மோர்கல் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 138 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக் களையுமிழந்தது.

இதில் டுமினிஆட்டமிழக்காமல் 73 ஓட்டங்களையும் கலிஸ் 22 ஓட்டங்களையும் எடுத்ததுடன் அணித் தலைவர் சிமித் 2 ஓட்டங்களுடன் தசைப்பிடிப்பு காரணமாக ஆட்டத்தை இடைநிறுத்தி வெளியேறினார்.

பந்துவீச்சில் ஜோன்ஸன்,மைக்டொனால்ட் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் சிடில் 2 விக்கெட்டுக்களையும் ஹில்பென்ஹயூஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் 214 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையிலிருந்த அவுஸ்திரேலிய அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி 5 விக்கெட்டுக்களையிழந்து 331 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தி தென்னாபிரிக்க அணிக்கு வெற்றி இலக்காக 546 ஓட்டங்களை நிர்ணயித்தது.

இதில் ஹயூக்ஸ் 160 ஓட்டங்களையும் ஹட்ரிச் 81ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் ஸ்ரையன், நிற்னி, மோர்கல், கலிஸ் மற்றும் டுமினி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 546 ஓட்டங்கள் என்ற இமாலய வெற்றி இலக்குடன் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி நேற்றுமுன்தினம் நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் 2விக்கெட்டுக் களையிழந்து 244 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் ஐந்தாவதும் இறுதியுமான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி இரண்டாவது இன்னிங்ஸில் 370 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்து 175 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சொந்த மண்ணில் தோல்வியடைந் தது.

இதில் கலிஸ் 93,டி வில்லியர்ஸ் 84 ஓட்டங்களையும் அம்லா 43 ஓட்டங்களையும் மக்கன்சி 31, பௌச்சர் 25,மோர்கல் 24 ஓட்டங்களை எடுத்ததுடன் அணித்தலைவர் சிமித் துடுப்பெடுத்தாடவில்லை.

பந்துவீச்சில் சிடில்,ஹட்சிச் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் ஜோன்சன்,ஹில்பென்ஹயூஸ் மற்றும் றோத் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் அவுஸ்திரேலிய அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 2:0 என்ற கணக்கில் தனதாக்கியது.

இப் போட்டியில் இரண்டு இன்னிங்ஸிலும் சதமடித்து அவுஸ் திரேலிய அணியின் வெற்றியை உறுதிபடுத்திய ஹயூக்ஸ் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

**நம்பர்-1**

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கானசிறந்த அணிகள் தரவரிசையில் முதலிடத்திலிருந்த அவுஸ்திரேலியா இந்த தொடரிலும் தோல்வியடைந்தால் இரண்டாமிடத்துக்கு பின்தள்ளப் படுவதுடன் தென்னாபிரிக்க அணி நம்பர்-1 அணியாக மகுடம் சூட்டும் என எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் 16 வருடங்களின் பின்னர் தனது சொந்த மண்ணில் தென்னாபிரிக்க அணியிடம் 2:1 என்ற கணக்கில் தோல்வியடைந்து அவுஸ்திரேலிய அணி கௌரவத்தை இழந்தது. கடும் விமர்சனத் துக்குள்ளானது.

இதற்கு தென்னாபிரிக்க அணியை அதன் சொந்த மண்ணில் வீழ்த்தி பதிலடி கொடுத்த அவுஸ்திரேலிய அணி ஐ.சி.சி. தரவரிசையில் நம்பர்-1அந்தஸ்தை தன்வசமாக்கி உறுதி செய்தது.

இதேவேளை கடைசியாக 2006 ஆம் ஆண்டு ஜுலையில் இலங்கை அணியிடம் 2:0 என்ற கணக் கில் தொடரையிழந்த தென் னாபிரிக்க அணி முதன் முதலாக இரண்டரை ஆண்டுகளின்பின் இத்தொடரையிழந் துள்ளது.

# ஐந்தாவது டெஸ்ட் சமனிலையை நோக்கி

சந்தர்போல்-நாஷ் ஜோடியின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 544 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் இங்கிலாந்து அணி நேற்றுமுன்தினம் நான்காம் நாள் ஆட்டநேர முடிபில் 3 விக்கெட்டுக்களை யிழந்து 80 ஓட்டங்களை எடுத்திருந்தது.

மேற்கிந்தியத்தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 5 டெஸ்ட்,5 ஒரு நாள் மற்றும் ஒரே ஒரு இருபது-20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்டில் வெற்றிபெற்று மேற்கிந்தியத்தீவுகள் அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ள நிலையில் அடுத்த மூன்று போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிபடைந்தது.

இந்நிலையில் ஐந்தாவதும் இறுதியுமான டெஸ்ட் கடந்த 6ஆம் திகதி போர்ட் ஒப் ஸ்பெயினில் ஆரம்ப மானது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 6 விக்கெட்டுகளையிழந்து 546 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி மூன்றாம் நாள் ஆட்ட நேரமுடிபில் 4 விக்கெட்டுக்களையிழந்து 349 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் நான்காம் நாளான நேற்றுமுன்தினம் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி சந்தர்போல்-நாஷின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் அதன் முதலாவது இன்னிங்ஸில் 544 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் சந்தர் போல் ஆட்டமிழக்காமல் 147 ஓட்டங்களையும் நாஷ் 109,ஹயில் 102 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பிரோட், சுவான் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் பனீசர்2 விக்கெட்டுக் களையும் மற்றும் அன்டர்ஷன், கான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் 2 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையிலிருந்த இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்றுமுன்தினம் நான்காம் நாள் ஆட்ட நேர முடிபில் 3 விக்கெட்டுக்களை யிழந்து 80 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் பீற்றர்சன் 34ஓட்டங்களையும் கொலின்வூட் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழக்காமலிருந்ததுடன் குக் 24,ஸ்ரொரஸ் 14 ஓட்டங்களையும் ஷா ஒரு ஓட்டத் துடனும் ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் பாக்கர்,ஹயில் மற்றும் ஹைண்ட்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இந்நிலையில் ஐந்தாவதும் இறுதியுமான நாள் ஆட்டம் நேற்று இலங்கை நேரப்படி இரவு நடை பெற்றது.

# சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... 30





பந்துவீச்சில் முரளிதரன் 10 ஓவர்கள் பந்துவீசி 23 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து அணித்தலைவர் குரேன்ஜே (14), ஜொண்டிரோட்ஸ் (27) ஆகியோரை வெளியேற்றி 2 விக்கெட்டுக்களை வீழ்த்தி அசத்தினார்.

இந்நிலையில் 1994ஆம் ஆண்டு டிசம்பர் 18ஆம் திகதி ஈஸ்ட் லண்டனில் நடைபெற்ற தொடரின் 10 ஆவது போட்டியில் இலங்கை-நியூசிலாந்து அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 50 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களையிழந்து 255 ஓட்டங்களை எடுத்தது.

இதில் முரளிதரன் 10 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 50 ஓட்டங்களைக் கொடுத்து விக்கெட் எதனையும் வீழ்த்த தவறினார்.


பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 47.1 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 257 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுக்கள் வித்தி யாசத்தில் வெற்றிபெற்றது. பாலா

அடுத்து இலங்கை-தென்னாபிரிக்க அணிகள் 1994ஆம் ஆண்டு டிசம்பர் 21ஆம் திகதி போர்ட் எலிசபத்தில் நடைபெற்ற தொடரில் 12 ஆவது போட்டியில் மோதியது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களையிழந்து 237 ஓட்டங்களை எடுத்தது. இதில் முரளிதரன் 10 ஓவர்கள் பந்துவீசி 32 ஓட்டங்களை மாத்திர கொடுத்த போதும் விக்கெட் எதனையும் கைப்பற்ற வில்லை.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு மழைகாரணமாக வெற்றி இலக்கு 34 ஓவர்களில் 184 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. எனினும் இலங்கை அணி 34 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களையிழந்து 139 ஓட்டங்களைமாத்திரமெடுத்து தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறியது (பயணிக்கும்)

# எண் விளையாட்டு-35




***போட்டிவிதிகள்:*** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்களில் நிரப்பப்படும் எண்களின் கூட்டுத் தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணுக்கு சமமாக வர வேண்டும்.

இடமிருந்து வலமாக செல்லும் கட்டங்களுக்கும் இதே விதிதான். அக்கட்டங்களுக்கான கூட்டுத் தொகை இடப்புறம் கொடுக்கப்பட்டுள்ளது.

1 முதல் 9 வரையான எண்களை பயன்படுத்த வேண்டும். ஆனால் ஒரு வரிசையில் பயன்படுத்திய எண் திரும்ப வரக்கூடாது.

நேற்றைய பகுதிக்கான விடை



# வன்னியில் தொடர்ந்தும் மழை உணவு சமைக்க இடமில்லாததால் பட்டினியில் வாடும் மக்கள்

வன்னியில் தொடர்ந்து மூன்றாவது நாளாக நேற்றும் பெய்த கடும் மழையினால் சமைப்பதற்கு இட வசதியின்றி மக்கள் பட்டினியால் வாடுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ந்து கடும் மழை பெய்து வருவதால் போரினால் இடம்பெயர்ந்து தற்காலிக கூடாரங்களில் தங்கியுள்ள பொதுமக்கள் மிக நெருக்கடியான நிலைக்குள் சிக்கித் தவிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக புதுமாத்தளனில் உள்ள முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் வரதராஜா பி.பி. சிக்கு தெரிவித்ததாவது,

முல்லைத்தீவில் தொடர்ச்சியாக கடும் மழை பெய்து கொண்டிருக்கின்றது. மக்கள் ஏற்கனவே சிறு சிறு கூடாரங்களில் தறப்பாள்கள் மூலம் கொட்டிலமைத்து தங்கியிருந்தார்கள். இக் கூடாரங்கள் வெயிலை சமாளித்துக் கொள்ளவே அமைக்கப்பட்டது. மழை வரும் என யாரும் எதிர்பார்க்கவில்லை. வயல் நிலத்தில் கொட்டில்கள் அமைத்ததால் அவற்றுக்குள் ஒரு அடிக்கு மேல் வெள்ளம் வந்துள்ளது. மக்கள் தற்காலிகமாக வேறு இடங்களில் தங்குவதற்குக் கூட கட்டிட வசதிகள் இல்லை.

மக்கள் மழையில் நனைந்து அந்த வெள்ளத்துக்குள்ளேயே தொடர்ந்தும் இருக்கின்றார்கள். இவர்கள் சமைத்து உணவை உண்பதற்கு கூட வழியில்லை. ஏற்கனவே இங்கு உணவு பற்றாக்குறை உள்ள நிலையில் மழையால் அவர்கள் உணவின்றி பட்டினியாக உள்ளார்கள் எனத் தெரிவித்தார். (ச-14)

# இலங்கையில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்த பிரான்ஸ் நடவடிக்கை

இலங்கையில் அப்பாவி தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைத் தடுத்து அங்கு போர் நிறுத்தத்தை ஏற்படுத்த பிரான்ஸ் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்று இந்தியாவுக்கான பிரான்ஸ் துணைத் தூதுவர் ஜோலி இராயட் உறுதியளித்துள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக மனு அளிக்கச்சென்ற இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத் தலைவர்களிடம் அவர் இந்த உறுதி மொழி அளித்தார்.

இலங்கையில் போரை நிறுத்துவதற்காக போராடி வரும் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் புதுச்சேரியில் உள்ள இந்தியாவுக்கான பிரான்ஸ் துணைத்தூதுவர் ஜோலி இராயட்டை சந்தித்து உரையாற்றினர்.

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதை குறித்து அவரிடம் இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கத் தலைவர்கள் விரிவாக விளக்கினர். ஈழத் தமிழரின் நலனின் அக்கறை செலுத்தி வரும் பிரான்ஸ் அரசு இப்பிரச்சினையில் உடனடியாகத் தலையிட்டு இலங்கையில் போரை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரும் மனுவையும் அவர்கள் அளித்தனர்.

அவர்களின் கோரிக்கையை ஏற்ற பிரான்ஸ் துணைத் தூதுவர், இலங்கையில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்த பிரான்ஸ் அரசு அதனால் எந்த அளவு முடியுமோ அந்த அளவு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் உறுதியளித்ததாக பின்னர் ஊடகவியலாளரிடம் பேசிய மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்தார்.

இலங்கையில் போர் நிறுத்தம் செய்யக் கோரியும் அப்பாவி தமிழர்கள் கொல்லப்படுவதை தடுக்கக் கோரியும் மருத்துவ மனையில் மருத்துவம் பெறும் அப்பாவி தமிழ் மக்கள் குழந்தைகள், பெண்கள் கொல்லப்படுவதைத் தடுக்கக் கோரியும் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் குழுவும் ஐரோப்பிய கூட்டணி நாடுகளும் பிரான்ஸ் நாடும் சேர்ந்து இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தலை யிட்டு போர் நிறுத்தத்தைக் கொண்டு வர வேண்டும் என வலியுறுத்தி மனுக்கொடுத் துள்ளோம். ஈழத் தமிழர்களுக்கு உலக நாடுகளில் அதிகம் பாதுகாப்புக் கொடுத்த நாடு பிரான்ஸ் நாடுஆகும் என வைகோ தெரிவித்தார். (ச-5)

## யாழ்ப்பாணம் வந்த...

290 மெற்றிக் தொன் அளவுடைய அத்தியாவசிய உணவுப் பொருட்கள் 22 லொறிகளில் நேற்று முன்தினம் கொழும்பிலிருந்து ஏ-9 வீதியூடாக யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு 22 லொறிகளின் யாழ்.நோக்கிய பயணத்தினை சமூக சேவைகள் அமைச்சரும் வடக்கு மாகாண விஷேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

மீண்டும் நேற்றுக்காலை வவுனியாவுக்கு வந்தடைந்த இந்த 22 லொறிகளையும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வடக்கு மாகாண விஷேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா, மீள் குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான பசில் ராஜபக்ஷ ஆகியோர் இணைந்து ஏ-9 பாதையூடாக வழியனுப்பி வைத்தனர்.

இந்நிலையில் உணவுப் பொருட்களுடனான இந்த 22 லொறிகளும் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் நாவற்குழி அரச களஞ்சியத்தை வந்தடையுமென எதிர்பார்த்து கையேற்கும் நிகழ்வை யாழ்.செயலகத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

எனினும் 22 லொறிகளும் நேற்றிரவு 7.30 மணிக்கே நாவற்குழி அரச களஞ்சியத்தை வந்தடைந்ததாகவும்.

இரவோடு இரவாக 22 லொறிகளிலுமிருந்து பொருட்கள் இறக்கப்படுவதாக யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

அத்துடன் இன்று காலை யாழ். குடாநாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட வெங்காயம், பீற்றூட், போன்சி, கோவா ஆகிய விவசாயப் பொருட்கள் 8 லொறிகளிலும் 2 குளிரூட்டப்பட்ட லொறிகளில் மீன்வகைகளும் ஒரு லொறியில் கருவாடு என 11 லொறிகளில் தென்னிலங்கைக்கு அனுப்பிவைக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை யாழ்.மாவட்டத்தில் சந்தை நிலைவரங்கள் அறிந்து அதற்கு ஏற்பவே யாழ். உற்பத்தி பொருட்கள் தென்னலங்கைக்கு அனுப்பப்படுமெனவும் யாழ்.அரச அதிபர் மேலும் குறிப்பிட்டார். (ச-5)

## மாத்தறையில் தற்கொலைத்...

உதய நாணயக்கார தெரிவித்ததாவது,

அக்குறச பிரதேசத்தில் நடைபெற்ற முஹமது நபியின் பிறந்த தினத்தை அனுஷ்டிக்கும் மீலாது நபி இஸ்லாமிய தேசிய நிகழ்வில் அமைச்சர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது அங்கிருந்த விடுதலைப் புலிகளின் தற்கொலைதாரி ஒருவர் தான் வைத்திருந்த வெடிகுண்டினை வெடிக்க வைத்துள்ளார்.

இதில் 15 பேர் உயிரிழந்துள்ளனர். காயமடைந்தவர்கள் மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்த அமைச்சர் மகிந்த விஜயசேகரவை ஹெலிகொப்டர் மூலம் கொழும்பு கொண்டு சென்றுள்ளோம்.

அப்பிரதேசத்தில் இராணுவத்தினரும் பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டுவருகிறார்கள் என்று தெரிவித்தார்.

இத்தாக்குதல் சம்பவத்தினைக் கண்டித்து அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ள அரசு, இந்தத் தாக்குதல் தவறாக கணிப்பிட முடியாதபடி விடுதலைப் புலிகளின் கைவண்ணமே என்றும் முஸ்லிம் சமூகத்தை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதல் இனங்களுக்கிடையேயும் மதங்களுக்கிடையேயும் அமைதியின்மையை ஏற்படுத்தும் நோக்கிலேயே மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்றும் தெரிவித்துள்ளது.

அங்கு நடைபெறவிருந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காக சென்றிருந்த அமைச்சர் அமீர் அலி இத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக தெரிவித்ததாவது,

அமைச்சர் பௌசி, அமைச்சர் சந்திரசிறி, அமைச்சர் பந்துபண்டார, அமைச்சர் மகிந்த யாப்பா போன்றவர்களும் அங்கு நிகழ்வுக்காக வந்திருந்தார்கள்.

நாங்கள் முன்னே சென்றுகொண்டிருந்தோம். அமைச்சர் மகிந்த விஜயசேகர பின்னால் வந்துகொண்டிருந்தார். அப்போது குண்டு வெடித்தது.

நாங்கள் ஓடியபோது முன்னால் தலையொன்று விழுந்தது. அப்போது தான் நான் தற்கொலை தாக்குதல் என உணர்ந்தேன். எங்கள் மீதெல்லாம் இறந்தவர்களின் இரத்தமும் சதைகளும் தெறித்திருந்தன.

இப்பிரதேசத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட முதலாவது பெருவிழா இது. இந்த விழா உயிர்ப்பலியோடு நடந்திருக்கிறது எனக் கூறிய அவர், இத்தாக்குதல் தற்கொலைத் தாக்குதலாக உள்ளது.

தற்கொலைத் தாக்குதலை இந்த நாட்டில் செய்யக் கூடிய வல்லமை புலிகளுக்கு மட்டுமே உண்டு எனவும் கூறினார். எனினும் இத் தாக்குதல் குறித்து புலிகள் தரப்புத் தகவல்கள் எவையும் வெளியாகவில்லை. (ச-3,5,14)

## புல்மோட்டையில் அமைக்...

புலிகளுக்கு எதிரான இராணுவ வீரர்களின் வெற்றிகளை க்காட்டிக் கொடுத்து இந்தியாவினதும் சர்வதேசத்தினதும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அதிகாரப் பகிர்வொன்றின் மூலம் நாட்டுக்குத் துரோகம் இழைக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது.

இலங்கையில் புலிகள் மாத்திரம் பிரிவினைவாதிகள் அல்ல. வேறு சில ஆயுதம் ஏந்திய, ஏந்தாத பிரிவினைவாத சக்திகளும் உள்ளன என்றும் அவர் கூறினார்.

ஜே.வி.பியின் விசேட செய்தியாளர் மாநாடு நேற்று கோட்டை சேர்லிஸ் ஹோட்டலில் நடைபெற்றபோது அங்கு கருத்து தெரிவிக்கையிலேயே ரில்வின் சில்வா இவ்வாறு கூறினார். இங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வுகாண இந்தியாவோ, அமெரிக்காவோ, ஐரோப்பாவோ உதவி செய்ய தேவையில்லை. எமது இராணுவத்தினரே இன்னும் ஒரு சில நாட்களில் இலங்கைப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்து விடுவார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் 13-வது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியும் அதற்கு அப்பால் சென்றும் மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் வழங்க அரசாங்கம் எடுக்கும் முயற்சியானது மீண்டுமொரு முறை பிரிவினைவாதிகளுக்கு சட்டபூர்வமாக செயல்பட அனுமதி வழங்குவது போன்றதாகும்.

தற்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் பிரிவினைவாதிகளின் ஆதிக்கம் நிறைந்துள்ளது. 13-வது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் வழங்குமாறு அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, திஸ்ஸ விதாரண, டிலான் பெரேரா, டக்ளஸ் தேவானந்தா மற்றும் கிழக்கு முதலமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் ஆகியோர் கோரி வருகின்றனர்.

தேர்தல் மேடைகளில் தேசப்பற்றுள்ளவர்கள் என்று கூறும் நபர்கள் மேடையிலிருந்து கீழே இறங்கி வந்ததும் நாட்டை காட்டிக் கொடுக்கும் சதித் திட்டங்களுடன் ஒன்றிணைந்து செயல்பட்டு வருகின்றனர் என்றார். (ச-5)

## பளை...

எறிகணைத் தாக்குதல்கள் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் வரை நீடித்ததாகவும், விடுதலைப் புலிகள் வீசிய எறிகணைகள் படையினரது முகாம்களிலும், முகாம்களிற்கு அருகிலும் வீழ்ந்து வெடித் துள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் எறிகணை வீசியபோது படையினரை ஏற்றிய 25 வரையிலான பேருந்துகள் யாழ்.குடாநாட்டிற்கு ஏ-9 பாதையூடாக அனுப்பி வைக்கப்பட்டிருந்ததாகவும், விடுதலைப் புலிகளின் இலக்கு இந்தப் பேருந்துகளாக இருக்கலாம் என படைத்தரப்பு எண்ணுகின்றது எனவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## இலங்கைப்...

விவாதிக்கப்பட்டதாக தெரிகிறது.

இலங்கையில் தற்போது நடைபெற்று வரும் யுத்தத்தில் சிக்கிக்கொண்டுள்ள தமிழர்களின் நிலை குறித்து விவாதிக்கப்பட்டது.

இந்தப் பேச்சுவார்த்தையின்போது மும்மைத் தாக்குதல் மற்றும் ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட பிரச்சினைகளும் விவாதிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

அதிபர் ஒபாமா பதவியேற்றபின் இந்திய அதிகாரி, அமெரிக்க அமைச்சரைச் சந்தித்துப் பேசுவது இதுவே முதல்முறையாகும்.

இந்தச் சந்திப்பின்போது சிவ்சங்கர் மேனன் அமெரிக்க உயர் அதிகாரிகளோடும் ஆலோசனை நடத்தினார். (ச-5)

## வன்னியில் நேற்று அகோர...

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால், புதுமாத்தளன் மற்றும் பொக்கணை பகுதிகளை நோக்கி நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை தொடக்கம் பிற்பகல் வரை அகோர ஆட்லெறி எறிகணை, பல்குழல் வெடிகணை, மோட்டார் மற்றும் பீரங்கித்தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இதில் 129க்கும் அதிகமான தமிழ் மக்கள் உயிரிழந்துள்ளனர். 277 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த நிலையில் கொண்டு வரப்பட்ட 277 பேரில் 45 பேர் மாத்தளன் மருத்துவமனையில் உயிரிழந்துள்ளனர். இவர்களில் 15 பேர் சிறுவர்கள் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

கொல்லப்பட்டவர்களின் 26 உடலங்கள் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடுமையான மழை பெய்து வருவதால் எறிகணைத் தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களின் உடலங்களை அப்புறப்படுத்த முடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளதாகவும் காயப்பட்டவர்களை உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்ல முடியாத நிலையும் காணப்படுவ்தாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து எழாம் திகதிவரை காயமடைந்த நிலையில் 700 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 137 பேர் சிறுவர்கள். இவர்களில் 32 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் கடந்த 10 நாட்களில் நடைபெற்ற எறிகணைத் தாக்குதல்களில் 50க்கும் அதிகமான சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 200க்கும் அதிகமான சிறுவர்கள் காயமடைந்துள்ளனர் என புதுமாத்தளன் மருத்துவமனை உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ச-5,14)

லாவண்யா
பல், மூக்குக்கண்ணாடி அகம்
552, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
கிளை
யாழ் வீதி, நெல்லியடி
(பொலிஸ் நிலையம் முன்பாக)
வடமராட்சி வாடிக்கையாளரின் நலன் கருதி எமது நெல்லியடி கிளை தினமும் திறக்கப்பட உள்ளது. மேலும் மூக்குக் கண்ணாடிகள், செயற்கைப் பற்கள், மிதப்பு பற்களுக்கான நிரந்தர கிளிப் அனைத்து விலைகளும் குறைக்கப்பட்டுள்ளன.
நெல்லியடியில் பார்வையிடும் நேரம்: காலை 9 – 2 மணிவரை
உரிமையாளர்
DR.றெஜி சொலமன்
T.P. வீடு: 222 5569, கடை: 222 9053

தொழிற் பயிற்சிகள்
*Mobile phone Repairing
Hard ware Hard ware Repairing
Soft ware Phone Lock காலம்:- 2 மாதம்
*றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்
Radio, CD player, DVD, Television, AMP, UPS
ஆகியன திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும். காலம்:- 9 மாதம்
*ஏயர் கொண்டிசனிங்
சகல குளிர்சாதனப் பெட்டிகள், ஏயர் கொண்டிசன் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும். காலம்:- 6 மாதம்
பயிற்சி ஆரம்பம்:- 15.03.2009 -16.03.2009
JAFFNA TECHNICAL INSTITUTE
45, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
T.P.:-6434, 0718561654
(C-2195)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.03.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.